புதுக்கோட்டை ஸமஸ்தான

# யுத்த அறிக்கை நிலயம்.

பிரசுரம்] 1941-ம் ௵ ஜனவரி ௴ 4 ௳ [ந. 25.

பிரஸங்கம் XXV.

## ருஷ்யா ஒரு புதிர்.

—o—

ஜாருடைய ஆதிக்கத்திலும் சரி, போல்ஷெவிஸத்தின் ஆதிக்கத்திலும் சரி, ருஷ்யா ஒரு பெரிய விடுகதையாகவே இருந்து வந்திருக்கிறது. எதனால் என்றால் எளிதில் சென்று அடைய முடியாத தூரப்பிரதேசத்தில் இருப்பதினாலேயே. அதனுடைய பரந்த ஸைபீரியப் பிரதேசமானது உலகமே அறியாத சிதம்பர ரகஸியமாக விளங்குகிறது. ஜாதி விஷயத்தில் கீழ்த்திசையும் மேல் திசையும் ஒன்றுசேரும் நடுநாயகமாக ருஷ்யா விளங்குவதாலும், விசாலமான சாம்ராஜ்யமாய்த் திகழுவதாலும், அரசியல், சமூகம் இவைகளின் சீர்திருத்தத்தில் புதிய விதமான பரிசோதனைகள் நடத்துவதாலும் ருஷ்யா ஓர் பெரும் புதிராக இருக்கிறது. இதோடன்றி ருஷ்யாவின் திலகமாய்த் துலங்குபவனுங்கூட ஒரு மூடு மந்திர விடுகதைதான். கிழக்கும் மேற்கும் ஒன்றுசேரும் ஜியார்ஜியாதான் அவனுடைய சொந்த ஊர்.

ஒரு புதிரை பரிசிலனை செய்யும்போது, சில கேள்விகளைக் கேட்பது ஸகஜமே. சென்ற யுத்தத்தில் எதிர்பாராதவண்ணமாக நொருங்கிப்போன ருஷியாவானது, இருபது வருஷம் கழித்து இந்த யுத்தம் துவங்கினகாலத்தில் எப்படி இருந்தது. யுத்தம் ஆரம்பிப்பதற்குச் சில வாரங்களுக்கு முன்—ஆவலும், துடிதுடிப்பும், பரபரப்பும் நிறைந்த இந்த வாரங்களில்—சமாதானத்திற்காகப் பெருமுயற்சி செய்யப்பட்டபோது உலகத்தின் கண்களுக்கு ருஷ்யாவின் சக்தி பெரிதாகத் தோன்றியது. யுத்தத்தில் ருஷ்யா இன்ன கட்சியில் சேரப்போகிற தென்பதை யொட்டியே சண்டையோ சமாதானமோ ஏற்படும் என்று எதிர்

பார்க்கப்பட்டது. எந்தக் காரணத்தால் பிற நாடுகள் இதற்காக ருஷ்யாவை எதிர்பார்க்கவேண்டும்? அதனுடைய பலத்த அரசியல் அமைப்பினாலா, அல்லது அதனுடைய அயல் நாட்டு கொள்கையினாலா, அதனுடைய மகத்தான சேனை, "சிவப்பு" சிப்பாயின் வீர உணர்ச்சி, சேனாதிபதியான வாரஷிலாவின் சிறந்த ஆற்றல், இவைகளினாலா? ருஷ்யாவானது சமாதானத்தை நாடுமென்று வெகு உறுதியாக நினைத்தவர்கள் பலருண்டு. அவர்கள் ஏன் அப்படி நினைத்தார்கள்?

399

ருஷ்யா உண்மையில் உலக சமாதானத்தைக் கோருகிறதா? ஒவ்வொரு நாட்டிலுமுள்ள புரட்சியாளரின் பேராசையாகவும், லெனினுடைய இன்பக்கனவாகவுள்ள சர்வதேசப் பொதுவுடமை வியாபகத்தின் கதி என்னவாகும்? பணம் படைத்த முதலாளித்வத்தை உலகம் வெறுத்துத்தள்ளும் காலமும் வரும். அப்பொழுது இவ்வெறுப்பின் உதவியால் இதுவரையில் உலகம் கண்டறியாத ஓர் பெரும் குழப்பத்தை எழுப்பி, காவல் மார்க்ஸினுடைய புதிய முறையை, நூதன சகாப்தத்தை ஆரம்பித்து வைக்கலாம் என்று ருஷ்யா காத்துக்கொண்டிருக்கிறதோ?

மியூனிக்கு ஒப்பந்த காலத்தில் ஏற்பட்ட நான்கு வல்லரசுகளின் ஒப்பந்தத்தில் ருஷியாவைச் சேர்த்துக்கொள்ளாததற்கு இதுதான் காரணமோ? அல்லது வேறு உண்டா?

இந்தக் கேள்விகளுக்கெல்லாம் பதில் எங்கே இருக்கிறது? ருஷ்யாவினுடைய அரசியல் அமைப்பையும், சமூக தத்துவத்தையும் நன்றாக ஆராய்ந்து அறிந்து, பழைய முறையிலிருந்து புதிய முறைக்கு மாறிய விதத்தையும், இப்புதிய அமைப்பில் ஏற்பட்ட முரண்பாடுகளையும் தெளிவாகத் தெரிந்துகொண்டால் எளிதில் பதிலை அறிந்துகொள்ளலாம்.

ருஷ்யா ஒரு புதிருமல்ல, புத்து மண்ணுமல்ல என்பதை இக்கேள்விகளின் விடையால் அறிந்து கொள்ளலாம். தன்னலமே மனதில்கொண்டு வேலைசெய்யும் ஒரு மனிதனானவன் அவ்வாறு சுயநலம் கருதுபவன் என்பதை நாம் அறியும்வரை அவன் செயல்கள் ஒன்றும் விளங்காது. இதைப்போலவே தான் ருஷ்யாவும். அரசியல் பொருளாதார முன்னேற்றங்களில் ருஷ்யா இன்னும் இளமைப்பருவத்திலேயே இருக்கிறது. பரம்பரை சம்பந்தம் இல்லாமலும், தொன்றுதொட்ட தொடர்பு துளிகூட இல்லாத முறையில் அமைந்த ருஷ்ய சமூகமானது உலகம் முழுவதும் பொதுவுடமை கொள்கையை பரவச்செய்த யத்தனமானது ஸித்திக்கவில்லை.

இவ்வாறு ஒருவருக்கும் புரியாமல் மறைபொருளாய் ருஷ்யா விளங்குவதற்கு, யோஸிப் ஸ்டாலினே பொறுப்பாளி. 'ஸ்டாலின்' என்றால் 'ஸ்டீல்' அல்லது எஃகு என்று அர்த்தம். புரட்சி காலத்தில் ஸ்டாலினுக்கு அவனுடைய ஸ்நேகிதர்கள் அளித்த பெயர் இது. ஜியார்ஜியாவில் டிப்ளிஸ் அருகே உள்ள அவனுடைய சொந்தக்கிராமமாகிய கோரியில் ஸ்டாலினையோஸிப் விஸாரினோவிச் ஜுகாஷ்விலி என்று அழைப்பார்கள். காக்கேஷிய மலைப்பிரதேசத்தில் அழகாகத் திகழ்ந்த

அந்த கிராமத்தில்தான் அவனுடைய பாலப்பருவம் கழிந்தது. அவனுடைய தகப்பனுர் ஒரு சக்கிலி. டிப்ளிஸில் உள்ள மடத்தின் பாடசாலையில் அவன் கல்வி கற்ருன். பைஜாண்டைன் நூல்கள் பலவற்றைப் படித்தான். இதே பாடசாலையில் மார்க்கிஸினுடைய க்ரந்தங்களையெல்லாம் அவன் முற்றக் கற்றுத் தேர்ந்தான். அந்தக் காலத்திய ருஷ்யச் சிறுவர்களைப் போலவே அவனும் புரட்சிக்காக ஆசைப் பட்டான். இளமையிலேயே தைரியமும், பொறுமையும், முயற்சியும், சொந்த யோசனைகளும் அவனிடம் நிறைந்திருந்தன. மற்ற இளைஞர்களையெல்லாம் அழைத்துக்கொண்டு மலைகளெல்லாம் சுற்றித்திரிந்து குதிரைகள் பிடிப்பது அவனுடைய விளையாட்டு. சிறுவர்கள் விளையாடும் விளையாட்டா இது! டிப்ளிஸில் உள்ள ஜனநாயகக்கட்சியில் அவன் சேர்ந்து விரைவில் அதன் தலைவஞைன். ருஷ்யாவின் ஒரு தனி மூலையில் வசித்தாலும், ருஷ்யாவெங்கும் ஓர் பெரும் புரட்சியைக் கிளப்பவேண்டும் என்ற பேராசை அவனைப்பிடித்துக்கொண்டது. ஸைபீரியாவிலிருந்து ஸ்விட்ஜர்லண்டுக்குச் சென்ற லெனினைப்பற்றியும், அவனு டைய புரட்சிக்கனவைப்பற்றியும் ஸ்டாலின் கேள்விப்பட்டான். லெனினே அவன் குலதெய்வமாஞன். லெனினுடைய "இஸ்க்ரா", அல்லது "நெருப்புப் பொறி" என்ற சஞ்சிகையின் பக்கங்களைப் புரட்டிப் புரட்டிப் படித்தான்.

இந்த ஜியார்ஜிய இளைஞனுடைய புரட்சிகரமான செயல்கள் அரசாங்கத்தின் கவனத்தைக்கவர்ந்தன. பலதடவைகளில் அவன் சிறையில் அடைக்கப்பட்டு ஒவ்வொரு தரமும் தப்பிவிட்டான். 1905 ஆம் வருஷத்தில் ஜார் சக்கரவர்த்தி பாகுவில் நடந்த தார்த்தாரிய ஆர்மீனியக் கலகங்களையும், காக்கஸஸ் மலைவாசி களின் கலகங்களையும் அடக்கியபோதும் தன்னுடையகக்ஷியினர் இராஜாக்கினைக்கு அடங்கியபோதும் ஸ்டாலின் மனம் நொந்தவனுய் பின்லாந்திலுள்ள தாமர் போர்ஸுக்குச் சென்ருன். வாயால் சொல்லுவதைவிட கையால் செய்வதே சிறந்தது என்று நம்பிக்கையுடன் அடங்கியிருந்தான் ஸ்டாலின். வலிமையும், பொறுமையும், மனே உறுதியும், தந்திரமும் நிறைந்து காரிய சித்தியடைவதி லேயே கண்ணும் கருத்துமாய் இருந்த இக்கீழ்நாட்டவன் இந்த அரை ஐரோப் பிய நாட்டில் ஒரு புரட்சியை ஆரம்பித்து வைத்தான் என்ருல்! ஆனுலும் அவன் மறைவிலிருந்தே வேலை செய்ய வேண்டியிருந்தது. அவனுடைய குலதேவதை யான லெனின் ஸோவியத்தத்துவத்தை முறைப்படுத்தி பிரசாரம்செய்ய முயற்சித் துக்கொண்டிருக்கையில், ஸ்டாலினுனவன் அங்கங்கு பொதுவுடமை அணுக்களை உண்டாக்க வேண்டியிருந்தது. மகாநாடுகளையும் கூட்டங்களையும் அவன் அறவே வெறுத்தான்.

மார்ச்சுமாத புரட்சிக்குப்பிறகு லெனினும் மற்ற ஸோவியத்தார்களும் பின்லாந்துக்கு தப்பியோடிய பொழுது ஸ்டாலின் மட்டும் மிகுந்த தைரியத் துடன் ருஷ்யாவிலேயே தங்கி, புரட்சிக்காக ஜனங்களை ஒன்று கூட்டித் தயார் செய்வதில் ஈடுபட்டான். தாமர்போர்ஸில் புரட்சியாளரின் மகாநாடு ஒன்று நடக்கப்போகிறது என்று அவன் கேள்விப்பட்டவுடன் வெகு தூரத்தில் உள்ள

அந்த இடத்திற்கு அவன் காலாலேயே நடந்து சென்று, தன் மனிதர்களையெல்லாம் ஒன்று கூட்டி அந்தக்ஷணமே காரியத்தில் ஈடுபடவும், யுத்தத்தைத்தொடங்கவும் ஏற்பாடு செய்ய ஆரம்பித்தான். ஆனால் மென்ஷெவிக் கட்சியினர் இந்தப் புரட்சியை அவசரப்படாமல் மெதுவாக நடத்தவேண்டுமென்று வற்புறுத்தினார்கள். இவர்களில் 'டிராட்ஸ்கி, ஜினோவியாவ், காமினுவ் என்பவர்கள் முக்கியமானவர்கள். சொற்பொழிவாற்றல் நிறைந்த டிராட்ஸ்கியின் தலைமையின் கீழ் இந்த கட்சியானது அங்கு கூடி இருந்த புரட்சியாளரின் மனங்களைக்கவர்ந்தது. ஆனால் இந்த ஜியார்ஜிய சக்கிலியானவன் முடிவில் செய்த சிறந்த பிரசங்கத்தினால் அங்குள்ள பெரும்பான்மையோருக்குத் திருப்தி அளித்தான். தாமர்போர்ஸ் மகாநாட்டிற்குப்பிறகு எல்லாப்பொதுவுடமைக்காரர்களும் அவரவர்கள் ஒளிந்திருந்த அயல் நாடுகளுக்குச் சென்றுவிட்டார்கள். ஆனால் ஸ்டாலின் மட்டும் ருஷ்யாவுக்குத் திரும்பினான். லெனின் தலைமையின்கீழ் அமைக்கப்படும் அந்தப் பெரிய கட்சிக்கு ஏராளமாகப்பணம் வேண்டியிருந்தது. பணத்திற்காக லெனின் ஸ்டாலினுடைய உதவியை நாடினான். தன் குலதெய்வம் பணம் கேட்பதால் அதை எப்படியாவது நியாயமாகவோ, அநியாயமாகவோ ஸம்பாதித்துவிட வேண்டும் என்று ஸ்டாலின் தீர்மானித்தான்.

பலாத்கார கொலைக்கொள்ளையினால் அவன் அதிகமான பணம் சேர்த்துக் கொடுத்தான். 1907-ம் வருஷத்திலிருந்து 1917-ம் வருஷம் வரை ஸ்டாலின் துணையின்றித் தனியாக, அமைதியாக மிகவும் ஊக்கத்துடன் வேலை செய்தான். திறமைவாய்ந்த கட்சித்தலைவர்களெல்லாம் ஸைபீரியச் சிறைகளில் வருந்திக் கொண்டும், சிலர் ஜினீவாவில் உட்கார்ந்து கொண்டு பிரசுரங்களைத் தயாரித்துக் கொண்டிருக்க, ஸ்டாலினே புரட்சி சம்பந்தமானவைகளையெல்லாம் படித்தறிந்து உள்ளுக்குள்ளேயே சகலமும் செய்தான். இம்மாதிரி செய்து வந்ததில் அவனுக்கு அளவற்ற பொறுமையும், இரும்பினும் வலியமனோதிடமும் அனுபவபூர்வமாக ஏற்பட்டன. மிகவும் ஏழ்மையான உணவையே அவன் அருந்தி வந்தான். போலீஸ்காரர்களாலும், போர்வீரர்களாலும் உதைக்கப்பட்டும், துன்பப்படுத்தப்பட்டும் வந்தான். ஏற்கனவே எப்பேர்ப்பட்ட சிறையில் இருந்தும் தப்பியோடும் திறமைவாய்ந்தவன் என்று பேர் பெற்றதினால் அவனை ஒரு சமயம் இரண்டு வரிசையாக நிற்கும் போர் வீரர்களின் நடுவில் ஓடச் செய்தார்கள். ஒவ்வொரு போர்வீரனும் துப்பாக்கிக்கட்டையால் அவன் தலையில் தட்டிக்கொண்டே வந்தான். ஆனாலும் இதற்குப் பிறகும் ஸ்டாலின் உயிருடன் இருந்தான். வேறொருவனாய் இருந்தால் அப்பொழுதே இறந்திருப்பான். 1913-ம் வருஷம் வரையில் அவனுடைய கட்சியினரும்கூட அவனை அடியோடு மறந்தார்கள். அதேவருஷத்தில் வெகுதூரத்திலுள்ள ஸைபீரியாவுக்குப் போலீஸாரால் அழைத்துச் செல்லப்பட்டான். 1917-ம் வருஷம் மார்ச்சு மாதம் ஏற்பட்ட புரட்சியின் குழப்பத்தில்தான் அவன் தப்பியோடி வரமுடிந்தது.

அவன் பீடர்ஸ்பர்க்குக்கு வந்தபொழுது தன்னுடைய சண்டமாருதப்பிரசங்கங்களினால் கெரன்ஸ்கி ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்ததைக் கண்டான்.

அரசாங்கக்குற்றங்களுக்காக நாடுகடத்தப்பட்டு இப்பொழுது திரும்பி இருப்பவர்கள் அநேகரானதால் இவனை யாரும் கவனிக்கவில்லை. லெனின் தலைநகருக்குத் திரும்பும்வரையில் அவன் காத்துக்கொண்டிருந்தான். சற்றும் மாறாத உறுதியான நம்பிக்கையுடனும், பிடிவாதமான தேவதா விசுவாஸத்துடனும் அவன் லெனினுக்குக்கீழ்ப் படிந்து நடந்தான்.

ஏற்கனவே அமைத்திருந்தபடி போல்ஷெவிக் புரட்சியானது ஜனங்களிடையே கலகத்தைக் கிளப்புவதற்காக ஏற்படுத்தப்பட்டது. அதிகார வெறி பிடித்துப் பதவிக்காக ஆசைப்பட்டுக் கெரன்ஸ்கியும், கார்னிலாவும் போட்டி போடுகையில், லெனினனவன் ஜினேவியாவுடன் பின்லந்துக்கு ஓடிவிடவேண்டி வந்தது. அக்டோபர் 1917 கெரன்ஸ்கி தப்பியோடி, சேனதிபதி கார்னிலாவ் பெட்ரோகிராட்மேல் படையெடுத்துச்சென்றது தோல்வியடையவே, போலித்பூரோ என்று அழைக்கப்பட்ட முதல் மத்திய சபையானது லெனின், ஸ்டாலின், டிராட்ஸ்கி, காமனேவ், ஜினேவியாவ், ஸோகோல்னிகாவ், பூப்நாவ் முதலியவர்களால் கூட்டப்பட்டது. "ஒருவருக்கொருவர் அபிப்பிராயபேதப்படும் போல்ஷெவிக்குகளும், மென்ஷெவிக்குகளும் கலந்த கதம்பம்" என்று இச்சபை கூறப்பட்டது. விவாதப்பேச்சுகளில் ஸ்டாலின் ஸமர்த்தனல்லவாதலால் மௌனமாகயிருந்து தன்னுடைய மனதில் அவன் டிராட்ஸ்கியினிடம் கொண்டிருந்த துவேஷத்தின் விளைவை உலகம் இப்பொழுது கண்ணால் கண்டது. லெனின் நிலங்களையும் தொழிற்சாலைகளையும் பார்வையிடும் பரிசோதனதிகாரி வேலையையும், ஜாதிநிர்வாக அதிகாரி வேலையையும் ஸ்டாலினுக்கு அளித்தபோது கொஞ்சமும் முன்யோசனை இல்லாத டிராட்ஸ்கிக்கு இது பெரியவிடுதலை போல்தோன்றியது. "சிறிய வேலை" என்று அதை இகழ்ந்தான். ஆனால் ஸ்டாலினே பிரகாசித்த கண்களுடன, புன்முறுவலுடன், தன் தெய்வமாகிய லெனினைப்பணிந்து "எவ்வளவு இழிவாய் இருந்த போதிலும் எந்த வேலையையும் நான் செய்து முடிப்பேன்" என்று கூறினன். இந்தப் புதிய உத்தியோகத்தில் சுமார் நூறு ஜாதியாரையும், குடிஜனங்களையும் ஸோவியத் ஐக்கிய அரசாங்கத்தின் கீழ் சேர்ப்பதும், நிலங்களையெல்லாம் சரிவரப் பிரித்துக்கொடுப்பதும், தொழிற்சாலைகளை அமைக்கத் திட்டங்கள் போடுவதும்தான் ஸ்டாலினுக்குவேலை. இவ்வாறு அரைகுறையாக விடாமல் சம்பூர்ணமாக எதையும் செய்துமுடிக்கும் திறமையினால்தான் அவன் போல்ஷெவிக் ருஷ்யாவைத் தன் கைக்கீழ்க்கொண்டுவரக்கூடிய சக்தியின் ரகசியத்தை அறிந்து, இன்றைய தேதி வரையிலும் தன் ஆதிக்கத்தைச் செலுத்தி வருகிறான். தன்னுடைய காரியங்களை நிர்தாக்ஷிண்யமாகவும், அமைதியாகவும், பூரணமாகவும் அவன் செய்து முடித்தான். ஆனால் தலைநகரிலிருந்த மற்ற தலைவர்கள் லெனினுக்குப் பிறகு அதிகாரம் வகிப்பது யார் என்பதைப்பற்றித் தீவிரமாக விவாதம் நடத்தியும், அதற்கான தந்திரங்களைச்செய்வதிலும் ஈடுபட்டிருந்தார்கள். ஸ்டாலினே ருஷ்யா முழுவதும் சென்று வல்கா-நதிக்கரையிலுள்ள ஸாரிட்ஸினிலும், கிர்கி புல்வெளிகளிலும் எழுந்த கலகங்களை அடக்கினன். அவன் சென்ற இடங்களிலெல்லாம் கலகங்களை அடக்கி அங்கங்கு சீர்திருத்தங்களுக்கு வேண்டிய வழிகளையெல்லாம் ஏற்படுத்தினன்.

உழைப்பு நிறைந்த இந்த வருஷங்கள் முழுவதும் சேனுதிபதி வோரோஷிலாவ் அவனுடன் கூடவே இருந்தான். ஸாரிட்ஸின்னில் வோரோஷிலாவுடனும், சிவப்புப்படையுடனும் இருந்தபொழுதுதான் அவன் அதிகாரிகள் அமைப்பைச் சீர்படுத்தினுன். இத்தகைய கடுமையான மாறுதல்கள் சேனுதிபதி டிராட்ஸ்கிக்கு அளவற்ற கோபத்தை உண்டாக்கியது. காவலில் வைக்கப்பட்டிருந்த சில சேனை உத்யோகஸ்தர்களை விடுதலை செய்யும்படி டிராட்ஸ்கி ஸ்டாலினுக்குத் தந்தி அடித்தான். ஸ்டாலினே தந்தியைப் பிரித்துப்பார்த்து அதற்குப் பின்புறம் "இதைப்பற்றி நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டாம்" என்று எழுதிவிட்டான். எவ்வளவு நிதானத்துடன் படபடப்பு இல்லாமல் தன்னுடையகாரியத்தை ஸ்டாலின் செய்து முடிப்பான் என்பதற்கு இதுவே சாக்ஷி. டிராட்ஸ்கியின் அதிருஷ்ட கிருகத்தின் பார்வை குறைந்து வருகிறதென்றும், தன்னுடைய கிருகம் உச்சத்தை நோக்கித் தாவுகின்றதென்றும் அவன் அறிந்தான். 1921-ம் வருஷம், வியாதியினுல் லெனினின் உடம்பு பல ஹீனப்பட்டுக்கொண்டே வந்தது. போலிச்பூரோவின் முதல் அங்கத்தினன் லெனின், அவனுடைய வேலைகளைப் பூரணப்பொறுப்புடன் கவனிக்க ஒரு பொதுக் காரியதரிசி அத்தியாவசியமாயிருந்தது. லெனினுடைய மனைவியான குருப்ஸ்காயாவை டிராட்ஸ்கியும் நண்பர்களும் தங்கள் வசப்படுத்திக்கொண்டதால், லெனின் ஒரு தீர்மானத்திற்கும் வரமுடியாமல் இருந்தது. காகஸஸ்ஸிலிருந்து ஸ்டாலின் திரும்பியதும், தன்னையே காரியதரிசியாக நியமிக்க வேண்டுமென்று வற்புறுத்தவே, லெனின் தடைசொல்லாமல் ஒப்புக்கொண்டான். இன்றைக்கும், அவன் அன்று லெனினிடம் இருந்த மாதிரியே பொதுக்காரியதரிசியாகவே இருந்து வருவது விநோதம்தான். டிராட்ஸ்கி மிகவும் அலக்ஷியத்துடன் இருந்தான். இது ஒரு சிறிய உத்தியோகம்தானே என்று கருதினுன். வன்மை வாய்ந்த லெனினுக்குப்பிறகு அதிகாரம் வகிக்கக்கூடிய திறமைசாலி தான் என்று டிராட்ஸ்கி இறுமாப்படைந்தான்.

அரசியல் நிர்வாகத்தை அமோகமான திறமையுடன், ஒன்றையும் விடாது செய்து முடிக்கும் ஆற்றலுடன் நடத்தி, எல்லா நடவடிக்கைகளும் தன்னுடைய அதிகாரத்திலேயே அடக்கியாளும் ஸ்டாலினை லெனின் பாராட்டினுலும், அவனுடைய திறமையைக் கண்டு அஞ்சினுன். தன்னுடைய கட்சியினருக்குப் பின்வருமாறு எழுதினுன்:—"எல்லா அதிகாரங்களையும் தானே வகித்துக்கொண்டான் ஸ்டாலின்; ஆனுல் இவற்றைச் சரியாகப் பிரயோகிப்பானே வென்று நான் அஞ்சுகிறேன். அவன் மிகவும் கடுமையாகவிருக்கிறுன். அவனை இந்த உத்தியோகத்தில் வைத்துச்சமாளிக்கமுடியாது. ஆகையால் அவனை நீக்கிவிட ஒரு வழியைத் தேடுங்கள்."

லெனின் தன்னுடைய மனோரதங்களை நிறைவேற்ற முடியாது, அவ்வளவு வியாதியால் வருந்தினுன். லெனினுடைய படுக்கைக்குப்பக்கத்தில் நின்று டிராட்ஸ்கி ஸ்டாலின் அளித்த சிநேகத்தையும் ஆதரவையும் உதறி தள்ளினபோதிலும் லெனின் ஸ்டாலினுடைய நோக்கத்தையே ஏற்றுக்கொள்ளவேண்டிய

தாயிற்று. உலகப்புரக்ஷியே செய்து தீரவேண்டுமென்று டிராட்ஸ்கி வற்புறுத்தினன். முதலில் ருஷ்யாவில் புரக்ஷியை ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமென்றும் அதுவே பெரும்பாலாரின் நோக்கமென்றும் ஸ்டாலின் தன்னுடைய தலைவரிடம் சொல்லி ஏற்றுக்கொள்ளும்படி செய்தான்.

ஸ்டாலின் லெனின் மதமானது எங்கும் நிலவச் செய் தான். லெனினுடைய தேகத்தைத் தைலக்கொப்பறையில் இட்டு கிரெம்லின் என்ற இராஜ மாளிகையில் பத்திரப்படுத்தினன். ஸ்டாலின் தன்னை எதிர்த்தவர்களை யெல்லாம் "லெனினியத்தின் சத்துருக்கள்" என்று குற்றம் சாட்டி அடக்கினன். டிராட்ஸ்கி தேசப்ரஷ்டம் செய்யப்பட்டான். இன்றும் ஸ்டாலின் தன்னை ஸர்வாதிகாரி என்று சொல்லிக்கொள்ளாமல் "பொதுகாரியதரிசி" என்று சொல்லிக்கொள்ளுகிறன்.

தேச சீர்திருத்தத்தைக் கவனிக்கத் திரும்பினன் ஸ்டாலின். தேச முழுவதும் பசியால் வாடியது. கோஸ்ஸாக்கர்களும், குலாகர்களும் (பெரிய மிராசுதார்கள்) கலகம் செய்தனர். லெனினுடைய புதிய பொருளாதார கொள்கைத் திட்டமானது செல்வத்தைச்சிலர்கையில் வைத்து, ஏழ்மையைப்பலருக்கு அளித்தது. லெனினுடைய காதல் சுதந்திரச் சட்டமானது சரிவர நிறைவேறவில்லை. தொழிற்சாலைகளிலும், சுரங்கங்களிலும் ஒரே குழப்பம். பயிர் தொழில் முறைகளெல்லாம் மிகவும் பழைமையாய் இருந்தன. இருப்புப்பாதைகளும் உடைந்து போயின. இவைகளையெல்லாம் சீர்திருத்த ஸ்டாலின் ஐந்து வருஷ திட்டத்தை முதலில் கொண்டு வந்தான். பயிர்த் தொழிலில் இயந்திர சாதனங்களைப் பொருத்தினன். எல்லா அமைப்புகளையும் சமுதாய முறையில் நிறுவினன். ரயில் வேக்களை சீர்திருத்த காகனேவிச் நியமிக்கப்பட்டான். பாங்கிகளையெல்லாம் தேசிய ஸ்தாபனங்களாக்கினன். பிரசித்தி பெற்ற யாத்திரீகர் நிலையத்தை ஏற்படுத்தினன். உண்மையுள்ளவர்களும், நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களுமான போரோஷிலாவ், மோலோடாவ், காகநோவிச், இராடெக் முதலியவர்களையெல்லாம் தன்னுடன் சேர்த்துக்கொண்டான். சாம்ராஜ்யத்தின் கீழ் பாகத்திலும் கவனத்தைச் செலுத்தி துருக்கிஸ்தானத்தில் பருத்தி பயிர் செய்து பஞ்சு தொழிற்சாலைகளை யுண்டாக்கி விருத்தி செய்து, நெய்யப்படும் ஆடைகளை சீனவில் விற்க ஏற்பாடு செய்தான். ஏராளமாகக் கோதுமை பயிர் செய்து பிரும்மாண்டமான களஞ்சியங்களில் நோவொரிஸிஸ்க்கில் சேமித்து வைத்தான். ஹிட்லர் கோதுமை வேண்டும் என்று கேட்டபொழுது, ஸ்டாலின் அவனுக்குப் பத்து லக்ஷம் மரக்கால் கோதுமையையும் வண்டுகளையும் விற்றன் என்றும், அவற்றுள் எவ்வளவு மரக்கால் வண்டுகள் என்பது ஹிட்லருக்கும் ஸ்டாலினுக்கும் தான் தெரியும் என்றும் ஒரு கதை வழங்குகிறது. 1936 ஆம் வருஷத்தில் அவனுடைய இரண்டு ஐந்து வருஷத் திட்டங்களும் வெற்றிகரமாக நிறைவேறின. சமாதானம் நிறைந்த 20 வருஷங்களில் ருஷ்யாவை மகத்தான தேசமாக செய்துவிடலாம் என்று ஸ்டாலின் எண்ணினன். இவ்வாறு செய்வதால் ருஷ்யா தன்னந்தனியாய் ஒதுங்கி விளங்கும் என்பதை அவன் அறிந்தான்.

1936 ஆம் வருஷத்தில் ருஷ்யாவில் புதிய அரசியல் அமைப்பு வகுக்கப் பட்டது. இரண்டு சட்டசபைகள் ஏற்படுத்தப்பட்டன. ஆயினும் ஸ்டாலின் தான் தலைவனாக விளங்கினான். முதலாளித்துவ நாடுகளுடன் வியாபார ஒப்பந் தங்கள் செய்துகொண்டான் ஸ்டாலின். கிழக்குக்கோடி நாடுகளில் துருக்கி-ஸ்தானப்பருத்தியும் துணியும் இலங்காஷயர் சரக்குகளைத் தலைகாட்டவொட்டாமல் அடித்துக்கொண்டிருக்க, ஸ்டாலினோ தந்திரமாக இங்கிலாந்துடன் ஒரு வியாபார ஒப்பந்தம் செய்துகொண்டான். பின்லாந்து, பிரான்ஸ், பெர்ஷியா, சீனா, செக்கோஸ்லோவோக்கியா, ஆப்கனிஸ்தானம் முதலிய பல நாடுகளுடன் அனாக் கிரமிப்பு ஒப்பந்தங்கள் செய்துகொண்டான். ஏற்கனவே பிரான்ஸுடனும் செக்கோஸ்லோவோக்கியாவுடனும் பரஸ்பர உதவி ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டிருந்தன.

ராஜீய சம்பந்த பிரயத்தனங்களில் ஸ்டாலின் ஜெர்மனியைமட்டும் ஜாப்தாவி லிருந்து விட்டுவிட்டது விசித்திரமே. லெனின் என்ன செய்திருப்பான். ஹிட்ல ரோடு ஸ்டாலின் ஒப்பந்தம் செய்திருக்கவேண்டுமா? வெள்ளை ருஷ்யர்களும் உக்கிரேனியர்களும் ஸோவியத் ஐக்கியத்தில் சேர்ந்துகொள்ள ஆவலாய் இருந் தார்கள். அவர்களுடைய துரதிருஷ்டமாக அவர்கள் பெரும்பாலும் போலந்தில் இருந்தார்கள்.

ஜெர்மனியோ போலந்தின்மேல் கண் வைத்துக்கொண்டிருந்தது. நாஸி மயமாக்கிக்கொண்டுவரும் சர்வதேச நகரமான டான்ஸிக்கின் ஜனங்கள், தங்களை ஜெர்மனியுடன் சேர்த்துக்கொள்ளும்படி கேட்கும்வண்ணம் தூண்டப்பட்டார்கள். ஒருக்கால் ஜெர்மனியானது பிரிடனுடனும் பிரான்ஸுனுடனும் யுத்தம் செய்யும் படி தூண்டிவிடப்பட்டால்; வெள்ளை ருஷியர்களையும் யுக்ரேனியர்களையும் அந்த குழப்பத்திலிருந்து மீட்டுவிட சந்தர்ப்பம் வாய்க்கும் என்று ஸ்டாலின் நினைத் தான்.

இந்தச் சமயத்தில் ஸ்டாலின் இங்கிலாந்தைப்பற்றியும் சிந்தித்துக்கொண்டி ருந்தான். "இங்கிலாந்தின் நடவடிக்கைகள் ஒன்றும் புரியவில்லையே! எவ்வளவு தான் வேலையில்லாத்திண்டாட்டம் இருந்தாலும் எளிமையும் வறுமையும் தாண்டவமாடினாலும் உழவனும் தொழிலாளியும் கலகம் செய்யவில்லையே! நம் முடன் எந்தவிதமான உறவுக்கொள்கையை அது கையாண்டு வருகிறது. அந்தப் பழைய முறையும் நமது பொதுவுடைமையும் ஒன்று சேருமா? தொழிற் கட்சியினர் புரட்சிக்கு லாயக்கானவர்கள் அல்ல. 'அரசாங்க நெறி' என்ற அந்த பிரத்தியேக மான ஆங்கிலேய சாமான் அவர்களை நீதிக்கும் சட்டத்திற்கும் கட்டுப்படுத்தி விட்டது. இங்கிலாந்தை உஷாராக கவனிக்கவேண்டும்."

1938 வருஷத்தில் இளவேனிற் பருவத்தில் ஹிட்லர் ஆஸ்டிரியாவுக்குள் நுழைந்தபோது, ஆக்ரமிப்பைத்தடுப்பதற்காக ஸ்டாலின் ஒரு மகாநாட்டைக் கூட்டும்படி யோஜனை சொன்னான். உண்மையான மனதுடன் அந்த யோஜனையைக்கூறினானா? அல்லது எதிர்ப்புக்காக ஒரு சந்தர்ப்பத்தை ஏற் படுத்திக்கொள்ள வேண்டுமென்பதுதான் அவனுடைய நோக்கமா? எப்படியோ,

நேசதேசத்தார் அவனைத் தள்ளினார்கள், செக்கோஸ்லோவோக்கியாவில் ஹிட்லர் புகுந்தபோது இங்கிலாந்தும் பிரான்ஸும் யுத்தத்திற்குத் தயாரில்லை என்பதை ஸ்டாலின் பூரணமாக அறிந்திருந்தான். 1935 வருஷம் பரஸ்பர உதவி ஒப்பந்தத்தின் படியேதான் நடத்தப்போவதாக ஸ்டாலின் முழக்கினான். இங்கிலாந்தும் பிரான்ஸும் இந்த ஒப்பந்தத்தை விலக்கியபோது, ஸ்டாலின் ஒரு நிபந்தனையின் பேரில் செக்கர்களுக்கு யுத்த உதவி செய்வதாகக்கூறினான். சுடேட்டன் பிரதேசத்தை ஜெர்மனிக்குக்கொடுத்து விடுவதைப்பற்றி பிரிடன், பிரான்ஸ், ஜெர்மன், இதாலிய அரசாங்கத்தார்கள் சமர்ப்பித்த இறுதி நிபந்தனைகளை செக்கர்கள் மறுத்து விடவேண்டுமென்பதே ஸ்டாலினுடைய நிபந்தனை.

ருஷ்யாவின் உதவியை இச்சிறிய குடியரசு மறுத்தபோது தன்னால் ஆனவரைதான் செய்து முடித்ததாக அவன் உலகத்திற்கு கூறினான்.

மியூனிக் வந்துபோயிற்று. தேசங்களெல்லாம் மும்முறமாக ஆயுத விருத்தியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தன. ருஷ்யாவில் 'ஆசிரியர் மமூலூக்' என்ற சினிமா படமொன்று பிடித்தார்கள். ஹிட்லர் யூதர்களை வெறுத்துத் துன்புறுத்துவதைக் கண்டிக்கும் நாஸி எதிர்ப்புப் படம் இது. ஆனால் ஜெர்மனியானது அரசாங்க மூலமாகவோ பத்திரிகை மூலமாகவோ இதை எதிர்க்கவில்லை.

1939-ம் வருஷ மார்ச்சு மீ'ல் பிரேக் நகரத்தின் வீழ்ச்சிக்குப் பிறகு சர்வதேச சங்கத்தின் சமுதாய பாதுகாப்புத் திட்டத்தை அலட்சியம் செய்து சமரஸ நடுநிலைமை வகித்த ஆங்கில பிரான்ஸ் தேசங்களின்மேல் ஸ்டாலினுக்குக் கோபம் வந்தது. இத்தேசங்கள் ஜெர்மனிக்கும் ஸோவியத்திற்கும் சண்டையை மூட்டிவிட்டு அவைகள் சண்டை செய்து அலுத்தவுடன் தாங்கள் நடுவில் நுழைந்து சமாதானம் பேச உத்தேசம் செய்கின்றன என்று ஸ்டாலின் சந்தேகப்பட்டான்.

இப்பொழுதுதான் ஸோவியத்தின் நேசத்தைப்பெற ஒவ்வொரு தேசமும் போட்டியிட்டது. பிரிடனின் பிரதிநிதி, பிரான்ஸின் ஸ்தானீகன், ஜெர்மனிய பால்டிக் நாடுகளின் பிரதிநிதிகள், துருக்கியின் தூதன் எல்லோருமாக ஸ்டாலின் வீட்டு வாசலில் காத்துக்கொண்டிருந்தார்கள். ஆனால் இந்த தேசங்களெல்லாம் ருஷ்யாவின் மறு மலர்ச்சியைத்தடை செய்ய வில்லையா? ஐரோப்பியதேச குடும்பத்திலிருந்து ருஷ்யர் விலக்கப்படவில்லையா? பல சமயங்களில் ருஷ்யா உதவி செய்ய முன் வந்தபொழுது அதை அவர்கள் ஏற்றுக்கொள்ள மறுத்து விடவில்லையா? ருஷ்யாவை யுத்தத்தில் சிக்க வைத்து ருஷ்யாவும் அதனுடைய போல்ஷெவிக் கொள்கையும் மடிவதைப் பார்க்க அவர்கள் முயற்சிக்கவில்லையா? இப்பொழுது முதலாளி நாடுகளை யுத்தத்தில் புகுத்திவிட்டு ருஷ்யா ஸாவதானமாகவும், தனியாகவும், தயாராகவும் இருக்கக்கூடிய நன்னாள் வந்தது. இதற்காக லெனின் வீணாக காத்திருந்தார்.

ருஷ்யன் புதிரை அறிய நாம் கீழ்திசையையும் நோக்கவேண்டும். சைனாவில் வியாபாரம் செய்யும் விஷயமாக 1923-ம் வருஷத்திலிருந்தே ருஷ்யாவுக்கும், ஜப்பானுக்கும் பேட்டியிருந்தது.

ருஷ்யாவானது உள்நாட்டுப்போரால் தத்தளித்தது. லக்ஷக்கணக்கான குலாக்கர்கள் இந்த விவசாயப் பகுப்புத் திட்டத்திற்கு அடங்க மறுத்தார்கள். அரசாங்கத்திற்குப் பயிர் செய்தும் அறுவடை முடித்தும் தான்யம் சேகரிக்கக் குடியானவர்களுக்கு சம்மதமில்லை. ஆனால் ஜியார்ஜிய சர்வாதிகாரியோ துளி கூட இரக்கம் காட்டவில்லை. 1939-ல் ருஷ்யா பலதேசங்களின் வியாபாரத்தைப் பிடித்துக்கொண்டது. 1931-ம் ௵ செப்டம்பர் ௴ 18-ம்தேதி ஜப்பான் மூகிடனைக்கைப்பற்றி மஞ்சுகோவையும் பிடித்துக்கொண்டபோது ஸ்டாலின் எதிர் நடவடிக்கையொன்றும் எடுக்கவில்லை. ருஷ்யாவுக்கும் ஜப்பானுக்கும் 'எல்லைப் புறத் தகராறுகள்" ஏற்பட்டன. தான் அதிகாரம் வகித்ததுமேயே ஸ்டாலின் விளாடிவாஸ்டக்கைப் பலப்படுத்தினான். அவன் இப்பொழுது ஜப்பானுடன் அனுக்ரமிப்பு ஒப்பந்தத்தை விரும்பினான். சியாங்கேஷேக்குடன் மற்றொரு ஒப்பந்தத்தையும் விரும்பினான். இதனுடைய உள்கருத்தானது ஜப்பான் சைனாவுடன் சண்டை செய்து அலுத்துச் சளைத்துவிட வேண்டுமென்பதே. ஸூங் குடும்பத்தாரால் சூழப்பட்ட சியாங்கேஷேக் பொதுவுடமைக் கொள்கையை ஆதரிப்பது சாத்தியமல்ல என்பதை அவன் உணர்ந்தான். ஜப்பானுடைய "அக்கிரம வெறி சகிக்காமல் சீனா தன்னுடைய உதவியை நாடி அதன் வழியாக ஜப்பானையும் மற்ற மேல்நாட்டு முதலாளித்வ ஆதிக்கத்தையும் அடியோடு விரட்டக்கூடும் என்று ஸ்டாலின் எதிர்பார்த்தான். ஆனால் தான் மஞ்சூரியாவைக் கவர்ந்து கொண்டதைப் பற்றி ருஷ்யா நடவடிக்கையொன்றும் எடுக்காமல் அலட்சியமாய் இருப்பதைக் கண்டு ஜப்பான் தைரியமடைந்தது. ஸ்டாலின் பயந்து விட்டான் என்று ஜப்பான் நினைத்தது. ஆசியா முழுவதும் தான் தலைமை வகிக்கவேண்டிய அதிர்ஷ்டகாலம் வந்துவிட்டது என்று ஜப்பான் குதூகலித்தது. பொதுவுடமைத் தீயானது ஆசியாவில் பரவாது இருக்கும்படி தடுத்து அணைக்கவேண்டும் என்று கருதியது.

ஜப்பான் பொதுவுடமை எதிர்ப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு யுத்தப் பிரகடனம் இன்றியே திடீரென்று சீனாவின்மேல் படை எடுத்தது. ஸிங்கியாங்கியில் வியாபாரத்தின் முன்னேற்றத்தைக் கொண்டுவந்ததைத் தவிர மற்றபடி கீழ்த்திசையில் சிரமமேற்பட்டால், மேற்திசையை நோக்குவதும் அதுபோலவே கீழ்த்திசையை நோக்குவதுமான ருஷ்ய மாமூலை அனுஷ்டித்து வந்தான். உண்மையில் அக்காலத்து ஐரோப்பாவும், இன்னும் வெகு ஸ்வாரஸ்யமான புதிராகயிருந்தது. ஜெனிவாவில் ருஷ்யாவை நிராகரித்த தேசக்கூட்டங்களிரண்டில் தன்னுடைய எல்லைப்புறத்திற்கப்பால் உள்ள நாடுகளே யுத்தத்திற்குத் தயாராகயில்லை என்பதை ஸ்டாலின் அறிந்துகொண்டான். ஆகையால் பிரிடன், பிரான்ஸ் தேசங்களிடம் பயமின்றிப்போகவே, அவன் பகிரங்கமாக யுத்தமுறைகளில் இறங்கினான். ஆங்கில நேசனை லிட்விநுவ என்ற வெளி நாட்டு மந்திரியைத் தள்ளினான். அவனுடைய கடற்படையும், ராணுவத்தையும் பலப்படுத்திக் கொண்டே, ஜெர்மானியருக்குத்தான் ஆதரவாகயிருந்தாலும் அல்லது நடுநிலைமையாகயிருந்தாலும் தனக்கு என்ன நன்மையுண்டு என்று ஜெர்மானியருடன் பேரம் செய்ய ஆரம்பித்தான். இதற்கெல்லாம் அவருக்கு மாலடாவ் ஒரு கருவியாக

இருந்தான். அவனுக்குக்கிடைத்த அரிய சந்தர்ப்பங்களாவன:—நாஸிகள் டான்ஸிக் நகரத்தில் வெகு பிடிவாதமாக இருந்தது. ஆங்கிலரும் மியூனிக் சங்கம் நடக்கும் சமயம்பார்த்து இவ்வளவு விசித்திரமான சமயம்பார்த்து, தாங்கள் நல்ல மதிப்புள்ள மனிதரைப் பூர்ண அதிகாரம்பெற்ற ஸ்தானீகராக நியமிக்காமல் ஒருவரும் அறியாத தூதனை அனுப்பியதும்தான்.

இந்தக்கொள்கையின் முடிவும் வெகு அருகாண்மையிலிருந்தது. டான்ஸிக் நகரமும் ஜெர்மனிக்குப் பணியத் தயாராகயிருந்தது. ஜெர்மனியின் சூழ்ச்சிகளில் கோபங்கொண்ட போலந்தும், ருஷ்யாவின் உதவியை நிராகரித்து பிரிடன், பிரான்ஸ் தேசங்களின் உதவியை நாடிற்று. அக்காலத்திலெல்லாம் "ஜனநாயகங்கள் ஒன்று சேர்ந்து சமாதானத்தை நிலைநிறுத்தவேண்டு"மென்று வெகு பலமாக கோஷம் செய்தது.

தன் கையில் எல்லாமிருப்பதை உணர்ந்த ஸ்டாலின் பிரிடிஷ், பிரஞ்சு ராணுவ தூது கோஷ்டியார், தன்னுடைய தலை நகரில்வந்து சேரும்வரைக் கார்த்திருந்து, அதன்மேல் தான் ஜெர்மனியுடன் செய்துகொண்ட அநாக்கிரமண ஒப்பந்தத்தை வெளியிட்டான். அது வெகு சாமார்த்தியமான வேலை. அந்த நேசதேச தூதுகோஷ்டியாரின் லக்ஷியமான போலந்தையே ஒரு சாக்காக கொள்ளலாமென்று ஸ்டாலின் நினைத்தான். ஏனெனில் போலந்து ருஷியாவின் ராணுவ உதவியை மறுத்தது. அதே சமயத்தில் வெள்ளை ருஷியாவையும், யுக்ரேனையும் பிடிங்கிக் கொள்ள சந்தர்ப்பம் வாய்த்தது. ஸமயோசிதம்போல் செய்வதில் வல்லவனான ஸ்டாலினுக்குச் சரியான சமயமும் வாய்த்தது.

தற்கால யுத்த முறையின் இரண்டு யமன்களான ஆகாய விமானங்களும் 'டாங்கிகளும்' போலந்தைத் துவம்சம்செய்து தரைமட்டமாக்கிவிட்டன. வோர்ஷிலாவுடைய சேனையானது போலந்தின் பாதியை பிடித்துக்கொண்டு ஜெர்மன் சேனையை பிரஸ்ட் லிதோவ்ஸக் என்ற இடத்தில் சந்தித்தது. குண்டுமின்றி ரத்தமுமின்றி வெகு சுலபமாக, ஹிட்லர் ஆசைப்பட்டிருந்த வெள்ளை ருஷ்யாவையும் உக்ரேன் பிரதேசத்தையும்ஸ்டாலின் கவர்ந்துகொண்டான். ருஷ்யா போலந்தைப் பிடித்துக் கொண்டதைப்பற்றி தன்னுடைய அபிப்பிராயத்தை ஹிட்லர் தெரிவித்துப் பலனில்லை. ஸ்டாலினுடைய அபிப்பிராயத்தில் போலந்து பிரிவினையோடு ருஷ்யாவின் ஸந்தர்ப்பங்கள் நின்றதாகயில்லை. பின்லாந்து ஸோவியத் குடியரசானது அழிக்கப்பட்டு, மான்னர்ஹெய்ம் தளபதி முதலாளித்வ ஆதிக்கத்தை மறுபடியும் பின்லாந்தில் ஸ்தாபித்தான். உண்மையில் பால்டிக் பிரதேசத்தில் ருஷ்யாவுக்கு ஒரு வெளிப்போக்கு தேவையாயிருந்தது. வெண் கடலும் ஆர்க்டிக் கடலும் பனியால் உறைந்திருக்கின்றன. கருங்கடலானது போஸ்பரஸ்ஸில் பாதுகாக்கப் பட்டிருந்தது.

லாபத்தைவிட நஷ்டம்தான் அதிகம் பின்லாந்து சண்டையில் ருஷ்யாவுக்கு. இப்புதிய நாட்டின் யுத்த வனங்களையெல்லாம் ருஷ்யா கைப்பற்றிக்கொண்டது. பீரங்கியும் போர் வீரருமட்டும் இருந்தால் போதாது. வீர உணர்ச்சி

ருஷ்யாவுக்கு உண்டா? ருஷ்யாவின் புதிர் விளங்கவே இல்லை. இஸ்தோனியா, லாட்வியா, லித்வேனியா, இவைகளை ரக்ஷக நாடுகளாகச் செய்து விட்டது ருஷ்யா. பால்டிக் கடற்கரை யோரமாகக் கப்பல் தளங்களையும் ககனவிமான தளங்களையும் சம்பாதித்துக் கொண்டது. ஆனால் இக்கப்பற் படைத் தளங்கள் எவ்வளவு தூரம் உபயோகப்படும் என்பதை இனிமேல் தான் பார்க்கவேண்டும். பால்டிக்குக்குள் நுழைய மூன்று வழிகள் உண்டு. பெரியவழி ('கிரேட் பெல்ட்') சிறிய வழி, ('லிட்டில் பெல்ட்') ஜலசந்தி (ஸவுண்டு) என்பன. சண்டைக்காலத்திலும் சரி, சமாதானக் காலத்திலும் சரி, அவை ஜெர்மானிய ஆதிக்கத்திற்குட்பட்டுள்ளன. ஆகையால் பால்டிக்கையடைய சண்டையேற்படும் பக்ஷத்தில் அச்சண்டை ஜெர்மனிக்கும் ருஷ்யாவுக்கும் தான் ஏற்படும். கருங்கடலைப் போஸ்போரஸ் மூடினால், இம்மூன்று வழிகளும் பால்டிக்கை மூடிவிடுகின்றன. வெண்கடல், ஆர்க்டிக் கடல் முதலியவைகளின் இயற்கையமைப்பே அவைகளுக்கு மூடியாக உள்ளன. பெஸாமோ, தலனின் கிராட் முதலிய இடங்களைப்போலவே விளாடிவாஸ்டாக்கின் கடற்கரையும் பனிகவியப்பட்டுள்ளது. ஆகையால் ருஷ்யா பால்டிக்கில் பல இடங்களைப் பிடித்ததன் பலனாக அதன் க்ஷேமத்திற்கும் ஜெர்மனியின் க்ஷேமத்திற்கும் அதிக முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

நாம் மறுபடி கீழ்த்திசையை நோக்குவோம். ருமேனியாவிலுள்ள பெஸ்ஸராபிய எண்ணெய்க் கிணறுகளையடைவதில் ருஷ்யாவே முந்திக்கொண்டது. இந்த விஷயத்தில் ஸ்டாலின் நாஸித் தேசியக்கொள்கையைத்தான் பின்பற்றினான். சரித்திரப் பிரகாரமும் தேசியமுறைப்படியும் பெஸ்ஸராபியர்களெல்லாம் ருஷ்யர்களே, பெஸ்ஸராபியாவைக் கைக்கொள்வதற்கு ஸ்டாலின் அன்றே தயாராக விருந்தான். வல்கா நதிக்கரையிலுள்ள ஸ்டேடின் கிராட்டிலிருந்து ருமேனியா எல்லையிலுள்ள டிராஸ்போல் வரை ஸ்டாலின் பெரிய சாலையொன்றை அமைத்தான். பெஸ்ஸராபியாவின் சேர்க்கையினால் ருஷ்யா பெரிய டான்யூப் ராஜ்யமாக வளர்ந்தது. டான்யூப்தான் பெஸ்ஸராபியாவின் தெற்கெல்லை. ஹிட்லருக்கு எண்ணெய் தேவையென்று ஸ்டாலினுக்கு நன்றாய்த்தெரியும். ஜெர்மனி இன்னும் நாடுகளைப் பிடிக்குமோ வென்ற பொறாமையாலோ, பயத்தாலோ, அப்புதிய நண்பனைத்தடுக்க ஸ்டாலின் முயற்சிக்கிறான்.

ருஷ்யா எல்லையில், ஆக்ஸஸ் நதிக்கரையோரமாக பல ஆகாய விமானத் தளங்கள் ஏற்பட்டன. பிரிடிஷ் சமாதான வியாபகத்தினிடையே வளர்ந்த புதுமையான நாகரீகம் படைத்த இந்தியா—லக்ஷக்கணக்கான ஜனங்கள் உறையும் இந்தியாவின் மேல் ஸ்டாலின் கண் போடுகிறானோ? இந்த ஆங்கிலேயர்களெல்லாம் விசித்திரமான ஜனங்கள்தான். வேதத்தையும் குரானையும் ஜெபித்துக் கொண்டு அதனால் தங்களுடைய வாழ்க்கையின் கடமையைச் செய்து விட்டோம் என்று திருப்தியடைந்திருக்க வேண்டிய இந்திய ஜனங்கள்கூட புதிய அரசியல் கொள்கைகளையும், பொருளாதார முறைகளையும் வகுத்து அவைகளுக்காகப்போராடவும் தொடங்கி யிருக்கின்றனரே. பிரிடனின் ராஜீய நெறிப் பற்றும், சட்ட ஆட்சியைக்கண்ணுங்கருத்துமாய் நடத்துவதில் நிர்தாக்ஷிணியமுமே

ஜனங்களுக்குள் அதிருப்தியை உண்டு பண்ணியிருக்கவேண்டும். இதைப் போக்க நாம் ஏன் நமது 'இஸ்க்ரா' நெருப்புப் பொறிமுறையைப் பிரயோகிக்கக் கூடாது? ஸோவியத் ஆயுதங்களையும் ஸோவியத் தத்வங்களையும் வேறுபடுத்தும் சியாங்கே ஷேக் போன்றயாரும் இந்தியாவில் இல்லை. தத்துவ சாஸ்திரிகளடங்கிய நாடாகையால் இந்தியா எளிதில் நம்முடைய தத்துவத்தை அங்கீகரித்துக் கொள்ளச்செய்து விடலாம். இந்தியாவிலிருந்து மலேய தீபகற்பம் வரை பொதுவுடமையை ஸ்தாபித்துவிடலாம். நாஸ்யமும் ஜனநாயகத்வமும் ஒன்றுக்கொன்று ஐரோப்பாவில் சண்டையிட்டுக் கொள்ளட்டும். நமக்கு ஆசியாவில் அதிக வேலை உள்ளது என்று ஸ்டாலின் இன்பநினைவு கொண்டிருந்தான்.

ஆனால் ஸ்டாலினுடைய இந்த இன்பக்கனவானது முறிந்தது. யுத்தரங்கத்தில் நடந்த பல நிகழ்ச்சிகள் ஸ்டாலினை அவனுடைய கற்பனை உலகத்தினின்று தட்டி யெழுப்பின. ஜெர்மன் சர்வாதிகாரியானவன் தன் இருப்பிடத்தை விட்டு வெளியில் கிளம்பி மார்ஷல் பெடெயினை பிரான்ஸில் சந்திக்கவும், பாரிஸில் லவாலைக் காணவும், பிளாரென்ஸில் முஸோலினியைப் பார்க்கவும் புறப்பட்டு வந்ததை ஸ்டாலின் கண்டான். தன்னால் உயர்த்திக்கூறமுடியாத முதல் விஷயம் இதுதான் என்பதை டாக்டர் கோயபல்ஸ் அறிந்து திடுக்கிட்டான். ஹிட்லர் பெர்ச்டஸ்கேடனில் அமர்ந்துஅரசர்களையும் அமைச்சர்களையும் காணவேண்டும். மாலோடாவ் மிகவும் தயவுடன் ஹிட்லரை வந்து கண்டு பேசிவிட்டு, பிரிடிஷ் வெடிகுண்டெறியும் வீரர்கள் செயல்களைப்பற்றிய உண்மையான தகவல்களை அறிந்து சென்றான். போரிஸ் அரசர் கூப்பிடப்பட்டார். அவர் பல்கேரியாவிக்குத் திரும்பிச் சென்றதும் தான் நடுநிலைமை வகிப்பதாகக் கடிதம் எழுதி அனுப்பினார்.

இத்தாலியப் பெரும்படையைக் கிரீஸ், கிரேக்க மலைகளினின்று அல்பேனியாவுக்கு விரட்டி அங்கிருந்து கடலுக்குத் துரத்தி வருகின்றன. நவம்பர் நிலவில் மூன்று இதாலிய நாசகாரிகளை வீழ்த்திய பிரிட்டிஷ் கப்பற்படை இன்னும் முன்னேறி ஒட்ரேண்டோ வளைகுடாவையடைந்து பாரியையும் ப்ரோட்ஸோவையும் தகர்த்தன. புக்புக்கிலுள்ள வாவெல் சேனைப்பாய்ச்சலால் தடுக்கப்பட்ட கிரஸியானேவின் சேனை ஒருபுறம் தவிக்க, ஆங்கில சேனைகள் பார்டியாவுக்கு மேற்கே வந்துவிட்டன.

மேற்கண்ட ஸம்பவங்களால் ஸ்டாலின் மனம் எவ்வாறு மாறுதலடையும் என்று நாம் கவனிப்போம் அவன் அநேகமாய் அடியிற்கண்ட விதமாய் நினைக்கலாம் ஆனால் இவைகளெல்லாம் யுத்தத்தில் அடிக்கடி மாறக்கூடியவை. நிலைத்தவையல்ல. இவைகளால் யுத்தத்தின் முடிவை நாம் நிச்சயமாய் நிர்ணயிக்கமுடியாது. சர்வாதிகார நாடுகளைப்போல் இங்கிலாந்தும் சளைத்துப் போகலாம். ஆனால் இங்கிலாந்தில் காண்பது என்ன? இந்த ஆங்கிலேயர்கள், நான் இரத்தம் சிந்தி ருஷ்யாவில் சாதித்ததை, அமைதியாக அரச முறையில் சாதித்து விட்டார்கள். சென்ற பதினேழு வருஷங்களாகப் பாடுபட்டு ஐந்து வருஷத் திட்டங்கள் அமைத்து, உலக புரட்சியால் நான் அடைய விரும்பியதை

இவர்கள் எவ்வளவு எளிதில் சாதித்தார்கள்! வகுப்பு வாதங்களையொழித்து, தேச வருமானத்தை எல்லாருக்கும் பிரித்துக் கொடுத்து, ஒவ்வொருவரும் தேசப் பாதுகாப்பு நிதிக்காகத் தாராளமாய் பொருளுதவியும் தேகவுதவியும் செய்கிறார்களே பிரிட்டனில்! இதையே எர்னஸ்ட் பெவின் ஆங்கிலத் தொழிலாளருக்குக் கூறுகிறார். சவுக்கினுதவியால் நமது அதிகாரிகள் கிரகிக்கும் சங்கதிகளைச் சிறித்த முகத் துடனேயே கிரகித்து விடுகிறார் பிரிட்டிஷ் மந்திரி. பிறருக்குப் புதிராக ஸ்டாலின் இருப்பதற்கு பதிலாக அவரே கலங்கி நிற்கிறார்.

இப்பொழுது அவன் ஜெர்மனிக்கருகே தெற்கு எல்லைப்புறத்தில் தன் படைகளை ஒன்று திரட்டுகிறான்.

உலகப்புரட்சித் திட்டத்தை அவர் கைவிட்டுவிட்டாரா? இப்பொழுது பிரிடனுக்கு பதிலாக ஹிட்லருடன் போரிடவேண்டியிருப்பதை உணருகிறாரா? இந்தியாவின்மேல் இன்னும் தன் கண்களை வைத்துக்கொண்டிருக்கிறாரா?

இருந்தாலும் ருஷ்யாவைப்பற்றி ஒன்றும் சொல்வதற்கில்லை. அது ஒரு பெரிய புதிர். அதனுடைய சர்வாதிகாரியோ புதிரிலும் புதிர்.

ஆனால் அவரைப்பற்றி லெனின் கூறியதை நாம் சிறிது காலத்திற்குப் பிறகு திருப்பிச் சொல்ல நேரிடும்:—அதாவது,

"எல்லா அதிகாரங்களையும் அவன் தானே வகித்துக்கொண்டுவிட்டான். ஆனால்..........அவற்றை அவன் சரிவரப் பிரயோகிப்பானோவென்றுதான் நான் சந்தேகப்படுகிறேன்."

# வார யுத்தச் செய்திகள்.

(26—12—40 லிருந்து 1—1—40 வரை).

## கிருஸ்மஸ் அன்று சக்கிரவர்த்தியவர்கள் விடுத்த செய்தி.

பிரிடிஷ் சாம்ராஜ்ய நாடுகளுக்கும், உலகத்துக்கும் கிருஸ்மஸ் தினத்தில் மாக்ஷிமை தங்கிய சக்கரவர்த்தி அவர்கள் விடுத்த செய்தியிலிருந்து கீழ்க்கண்ட பாகங்கள் மொழி பெயர்க்கப் பட்டிருக்கின்றன:—

"கிருஸ்மஸ் பண்டிகையானது, சமாதான காலங்களில் குடும்பத்தார் அனைவரும் ஒன்றுகூடி நன் மனதோடு சந்தோஷத்தைக் கொண்டாடும் தினமாகும். விசேஷமாக, இது குழந்தைகளுக்கான சுதினம். அவர்கள் இப்பொழுது எங்கே வசிக்க நேரிட்டிருந்தாலும் அவர்கள் சந்தோஷத்தை இன்று நாம் நாடுவோம்.

"யுத்தத்தால் ஏற்படும் பல துன்பங்களில் குழந்தைகளை விட்டுப் பிரிந்து இருக்கவேண்டிய கஷ்டமானது ஒன்றாகும். எதிரிகள் துணிந்து வந்தால் அவர்களை எதிர்க்கத் தயாராக நம்மில் அநேகம் பெயர்கள் இன்று தங்கள் கிரகங்களில் இல்லாமல் போர்முனையிலிருக்க நேரிட்டிருக்கிறது. மற்றும் சிலர் கருங்கடலைக் காத்துக்கொண்டும், லிபியாவில் தோற்றுப்போன எதிரியை விரட்டிக்கொண்டும் இருக்கிறார்கள். அநேக குடும்பங்கள் கலைந்துபோய், அவைகளைச் சேர்ந்த குழந்தைகள், கனடா, ஆஸ்திரேலியா, நியூஸிலாண்ட், தென் ஆபிராகிவிலும் இருக்கிறார்கள்.

"உள் நாட்டிலும், வெளி நாட்டிலும் பெற்றோர்களை விட்டுப்பிரிந்திருக்கும் குழந்தைகளுக்கும், அவர்களை அன்போடு வளர்க்கும் போஷகர்களுக்கும், அவர்களுடைய பெற்றோர்களுக்கும், உள் நாட்டிலிருந்து நாம் கிருஸ்மஸ்ஸுக்கான சுகவாழ்வைக் கோருவோம்.

"வரப்போகும் புதுவருஷத்தில் நமக்கு ஜயமுண்டாகுக; அதிலிருந்து இனிவரும் கிருஸ்மஸ் பண்டிகைகள் க்ஷேமத்தை உண்டாக்கட்டும்.

"வெளி நாடுகளிலும், உலகத்திலுமுள்ள மூத்தோர்களுக்கொரு செய்தி சொல்ல விரும்புகிறேன். சென்ற யுத்தத்தில் இளையவர்கள் யுத்தத்தில் மடிந்து, மூத்தோர்கள் பத்திரமாயிருந்தார்கள். இந்த யுத்தத்தில் அனைவரும் யுத்தத்தில் கலந்து, ஆபத்துக்குள்ளாக வேண்டியிருக்கிறது. இதில் மூத்தோர்களுக்கும் பெருமைதான்.

"யுத்தத்தால், ஒரு விதமாய் பிரிவென்பது ஏற்பட்டாலும் மற்றொரு விதமாய் ஐக்கியமும் ஏற்படுகிறது. இதற்குக் காரணம் அனைவரும் ஒன்றுசேர்ந்து பொதுவாயிருக்கும் ஆபத்தை எதிர்ப்பதும், கஷ்டப்படுவதும்தான்.

"பொருமையோடும், கஷ்டத்தோடும், சண்டை செய்து ஜயம் பெற்று ஒற்றுமையை யடைந்த இந்த ஐஸ்வர்யத்தை எதிர்காலத்தில் காப்பாற்ற வேண்டும்.

"இவ்விதமாக, இனி கிருஸ்மஸ் கொண்டாட்டங்களேற்படும்போது, நன் மனதோடு, இந்தப் புதுநட்பை நாம் கைவிடாது, கைபிடிக்கவேண்டும்.

வரவர, சுயலாபத்தைக் கருதாது, பரஸ்பர சகாயத்தை நாடினால் உலகமே உயர்ந்து நம் வாழ்க்கையும் பொருட்படும். அனைவருக்கும் இந்த கிருஸ்மஸ் பண்டிகையும், புது வருஷக்கொண்டாட்டமும் நன்மையைப் பயக்குமாக.

அடுத்த வருஷத்தில் நமக்கு க்ஷேமமேற்படுமென்று நாம் தைர்யமாயிருக்கலாம். நமக்கு வந்த ஆபத்தானது ஒரு விதமாக நிவர்த்தியாய்கொண்டிருக்கிறது. இனி வரப்போகும் ஆபத்தை நான் லக்ஷியம் செய்யவில்லை. இதுவரையில், தரையிலும், ஆகாயத்திலும், கடலிலும், எதிரிகள் பலமாய் யெதிர்த்தும் நமக்கு கிடைத்த வெற்றிகளிலிருந்து எனக்கு நமபிக்கை யேற்பட்டிருக்கிறது.

எதிர் காலத்தில் நான் கஷ்டத்தை எதிர் பார்க்காமலில்லை. ஆனால் வெற்றி நமக்குத்தானென்ற திண்ணமான நம்பிக்கை எனக்கு வந்து விட்டது. கடவுள் கிருபையால் இனி வெற்றியிலிருந்து நீதியும், அமைதியும் பிறக்கப்போகின்றன."

## கிருஸ்மஸ்ஸும், விமானப்போரும்.

கிருஸ்மஸ் அன்றைக்குச் சண்டையை நிருத்த உத்தியோக பூர்வமாக உடன்படிக்கை யொன்றுமில்லாமல் போனாலும், பண்டிகையின் விசேஷத்தால் அன்று இருதிரத்தாரும் விமானப்போர் நடத்தவில்லை. ஆகையால் அன்று ஜெர்மனி, இதாலி, ஜெர்மனி ஆக்ரமித்திருக்கும் நாடுகள், பிரிடன் முதலான இடங்களில் வெடிகளாலும், தீயாலும், யந்திர பீரங்கிகளாலும் வேதனை ஏற்படவில்லை. அதோடு மூடுபனியும், கீழிறங்கிய மேகங்களும் ஏற்பட்டு இருள் மூடியிருந்ததால் விமான எதிர்ப்பு முடியாமலும் போயிற்று. ஆனால் உத்தியோக பூர்வகமாக நிறுத்த உத்தரவொன்றும் கிடையாது. எதிரி நிறுத்தக் கேட்டுக்கொண்டாலும் மறுக்கப்படுமென்று மிஸ்டர் சர்ச்சில் காமன்ஸ் ஸபையில் சொல்லிவிட்டார். ஜெர்மன் விமானப்படையானது கிருஸ்மஸ்ஸில் எதிர்க்காதென்று வதந்தியானது அமெரிகாவில் வெளிவந்தாலும் அதை நம்புவதற்கில்லை. ஒரு அமெரிக்க நிருபர் கூறியபடி வருஷத்தில் 364 நாளும் கொள்ளையடிக்கும் ஒருவன் திடீரென்று ஒரு நாள் தெய்வபக்தியேற்பட்டு சொன்னசொல்லைக் காப்பாற்றுவானென்று நினைக்க இடமில்லை. ஆகையால் விமானப்போர் நின்றிருந்த போதிலும் பிரிடன் தன் பாதுகாப்பில் அசரவில்லை. அன்று படையெடுப்புக்கு வசதியான மூடு பனியும், கொந்தளிப்பற்ற கடலுமிருந்ததால் எதிரி எங்கு திடீரென்று படையெடுத்து விடுவானோவென்று சானல் கரைகளையெல்லாம் இரட்டித்த பலத்தோடு காக்கப்பட்டன.

ஆனால், கிருஸ்மஸ் பண்டிகையன்று இதாலியர்கள் மட்டும் கார்புயூவில் விமானப்போர் நடத்தி 21 பேர்களைக் கொன்று, 31 பேர்களை காயப்படுத்தினார்கள். இதற்கு எதிரிடையாக கார்புயூக் குழந்தைகளின் மேல் கருணைகூர்ந்து பிரிடிஷ் விமானங்கள் தின்பண்டங்களையும், விளையாட்டு சாமான்களையும் பைகளில் அடைத்துக் கீழே போட்டார்கள். இவைகள் பிரிடிஷ் மக்களுக்கு

கிரேக்கியர்களுடைய வீரச்செயல்களைக்கண்டு ஏற்பட்ட மகிழ்ச்சியைத் தெரிவிக்கக் கொடுக்கப்பட்ட பரிசுகளாகும். பிரிடிஷ் விமானங்கள் ஊரைவிட்டு விலகியதும், இதாலிய விமானங்கள் மறுமுறை வந்து குழந்தைகளைத் தாக்கிக் கொன்றன.

பார்டியாவில் குழிகளைத் தோண்டிக்கொண்டு ஒளிந்து நிற்கும் இதாலிய சைன்யங்கள் பேருக்கு மட்டும் கிருஸ்மஸ் பண்டிகையைக் கொண்டாடின.

கிரேக்கியர்கள் வெகு குதூகலத்தோடு பண்டிகையைக் கொண்டாடினார்கள். கபட கிருஸ்துவர்களாகிய இதாலியரிடமிருந்து கடவுள் விடுவித்ததில் அவர்களுக்கு அளவு கடந்த சந்தோஷமேற்பட்டிருக்கிறது. கிரீஸை யெதிர்ப்பவர்கள் கிருஸ்துவையும் எதிர்ப்பவர்களாவார்களென்று இவர்கள் கருதுகிறார்கள்.

உலகச் சரித்திரத்திலேயே முதல் முதலாக பெத்லகேம் அன்று தீபங்களை மறைக்க நேரிட்டது. கிருஸ்து ஜனன (Nativity)க் கோவிலானது உலகத்தில் முதல் முதல் ஏற்பட்ட கிருஸ்துகோவிலாகும். அங்கும் அன்று, அதைப்பாதுகாக்க தீபங்கள் மறைக்கப்பட்டன. வயல்களில் வழக்கம்போல் இடையர்கள் காவல் காத்து நின்றார்களே ஒழிய அங்கு தீபவொளி கிடையாது. சொக்கப்பானைகள் ஏற்றப்படவில்லை. ஏசுகிருஸ்துநாதர் பிறந்த குகையில் தீபமேற்றப்பட்டது. ஆனால் ஜன்னல்கள் மூடிவைக்கப்பட்டன. இதற்கெல்லாம் காரணம் இதாலிய விமானங்கள் திடீரென்று தோன்றி அனியாயம் செய்யுமோ வென்பதுதான். ஜெருஸலத்தில் புதுமாதிரியாக அநேக வர்ணத்தார் கூடினார்கள். அதாவது பிரிடிஷ் சாம்ராஜ்ய நாட்டார்களும், ஸ்வதந்திர பிரெஞ்சுக்காரர்களும், போலண்டு மக்களும், ஸெகோ-ஸ்லோவோகியா மக்களும் ஒன்றுகூடி க்ஷேத்திரத்தை பாது காத்துக் கொண்டிருந்தார்கள்.

## கிருஸ்மஸ்-பண்டிகைக்குப்பிறகு ஏற்பட்ட விமான எதிர்ப்புகள்.

குளிர், பனி, அதிகமாயிருந்தும், ஜெர்மனியின் பேரிலும், அது ஆக்கிரமித்திருக்கும் நாடுகளிலும், 26-ம் தேதி துவக்கி பிரிடிஷ் விமானங்கள் பகலிலும், இரவிலும், தாக்கின. படையெடுப்புத் துறைமுகங்கள், போர்டோ, பிரிட்டானி, லாடிரபோ, லோரியான், ஷெர்பார்க், பாக்-வுல்ப் (நிமிஷத்துக்கு 100 குண்டுகள்), பிரான்க்பர்ட், நேபிள்ஸ், பார்டியா, போர்டோ, டொப்ருக், கஸாலா, வ்லோனு முதலிய இடங்கள் எதிர்க்கப்பட்டன.

80 மணி நேரம் சும்மாயிருந்து விட்டு 27-ம் தேதி யன்று லண்டன் நகரத்தின் மேல் ஜெர்மானியர் மின்னல் போரைத் துவக்கினார்கள். 29-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை யன்று லண்டன் நகரத்தைக் கொளுத்தவென்றே ஜெர்மன் விமானங்கள் தீப்பந்தங்களைப் போட்டன. இதிலிருந்து அநேக கட்டிடங்கள் தீப் பிடித்தன. இவைகளிலொன்றாவது ராணுவ கேந்திரங்களல்ல. கில்ட்ஹால், ஸெண்ட்-பிரைட்ஸ் ஆலயம் (ரென் என்ற பெயர் போன சிற்ப சாஸ்திரி கட்டியது), ஸெண்ட்-வேதாஸ்த் ஆலயம், டாக்டர் ஜான்ஸன் ஜீயாபார்த்த வீடு (அகராதி

எழுதிய இடம்), கிரைஸ் சர்ச்சு ஆலயம், ஸெண்ட் பிரைட்ஸ் ஆலயம் (ஸாமுயல் பெபிஸ் ஞானஸ்தானம் பெற்றவிடம், ரிச்சேர்ட்ஸன் அடக்கம் செய்யப்பட்ட இடம்) முதலியவை பழுதாயின. தீயை அணைக்கும் வேலைக்காரர்கள் மும்மரமாய் வேலைசெய்து பழுதைக்கூடிய வரையில் குறைத்தார்கள். சீதோஷ்ண ஸ்திதி இடங்கொடுக்காததால், திங்கட்கிழமையன்று பிரிடன்மேல் விமானப் போர் ஏற்படவில்லை.

## அமெரிக்கா.

பிரஸிடெண்டு ரூஸ்வெல்ட் 29-ம் தேதி செய்த பிரசங்கமானது குடும்பப் பேச்சு என்று சொல்லப்பட்டாலும் உண்மையில் தன் தேசத்தாருக்குச் செய்த பஹிரங்கப் பிரசங்கமும் முறையடித்து தேசத்தாருக்குச் செய்ய வேண்டிய காரியங்களை வற்புறுத்தியதாகும். மேலும், இதைப்போல் நாஸி தத்துவத்தை இவ்வளவு கடுமையாகக் கண்டனம் செய்தது இதுவரையில் கிடையாது. பிரிடன் தோற்றால், ஐரோப்பா, ஆசியா, ஆபிரிக்கா, ஆஸ்திரேலிய கண்டங்கள் அச்சு நாடுகளாக ஆவதோடு, கருங்கடலும் அவர்கள் கை வசப்பட்டு, பொருளாதாரத்திலும், ராணுவத்திலும் அமெரிக்காவானது அச்சினுடைய துப்பாக்கி முனையில் அகப்பட்டுக்கொள்ளுமென்று எடுத்துக்காட்டினர். ஆக்கிரமிக்கவில்லையென்று வாக்குக்கொடுக்கப்பட்ட நாடுகளெல்லாம் விழுங்கப் பட்டு, நவீன முறையில் அடிமைகளாய்விட்டன. இந்த நாடுகளுக்கு நாஸிகளின் துப்பாக்கி முனையின் அனுபவம் பூரணமாய் உண்டு. தென் அமெரிக்கா அகப்பட்டு விட்டால், நாஸிகள் அமெரிக்காவிலுள்ள இதர குடியரசு நாடுகளையும் பிடித்துக் கொள்ளுவார்கள். இந்த தேசங்களுடைய ஏராளமான செல்வமே இவர்களை இங்கு படை எடுக்க இழுக்கும். நாஸிகளை சமாதான வழியில் திருப்புவது சாத்தியமான காரியமில்லை. தடவிக்கொடுத்துக் கொஞ்சிவிட்டதால் புலியானது பூனைக்குட்டி யாகாது. இம்மாதிரி பேசுகையில் கோபமதிகப்பட்டு, 'என்ன முட்டாள்தனம். கொள்ளைக்காரர்கள் நம்மை வளைத்துக்கொண்டு நம்மைக் கொன்றுவிடுவதாகச் சொல்ல, அதற்கு நாம் பயந்து கப்பம் கட்டினால் அதை ஒரு உடன்படிக்கை என்று சொல்லலாமா; அப்பேற்பட்ட சமாதானம் செய்தபிறகு இருதிறத் தாரும் யுத்தப்பிரயத்தனங்களுக்காக ஏராளமாய் ஆயுதங்களைத் தயாரிக்கமாட் டார்களா? மேலும், அதிலிருந்து பிரமாதமான வியாபாரப்போர் ஒன்று கிளம் பாதா?' என்று கேட்டார். நாஸிகள் சொல்லும் புது அரசியலில் புதிதொன்றும் இல்லை—அது பழைய அடிமைத்தனம்தான்; அதில் ஸ்வதந்திரமும், மதமும், நம்பிக்கையும் கிடையாது. அச்சு நாடுகள் உலகத்தை விழுங்கிவிடாதபடி பிரிடனும், பிரிடிஷ் சாம்ராஜ்யமும் எதிர்த்து ஈட்டி-முனைபோல் முன் நிற்கின்றன. இதுவரையில் உலகத்திலேயே கேள்விப்படாத மகாயுத்தத்தை பிரிடன் நடத்திவருகிறது. நாம் மிச்சம்பிடிக்கக்கூடிய ஒவ்வொரு யுத்த தளவாடத்தையும் பாக்கியில்லாது பிரிடனுக்கு ஜனநாயக ஆக்ஷியை நிலைநாட்டக் கொடுக்க வேண்டும். யுத்தம் வந்துவிட்டதுபோலவே அமெரிக்காவிலும் பாதுகாப்புக்காக ஆயுதங்கள் தயாரிக்கப்படவேண்டும். பிரிடனுக்கு உதவி செய்வதில் ஒருவித

மான தடையுமிருக்கக்கூடாது. இது விஷயத்தில் சர்வாதிகாரிகளென்ன சொன்னாலும் மன உறுதிகுறையக்கூடாது. இவைகளைச் சொன்னபிறகு பிரஸிடெண்டு ரூஸ்வெல்ட், "அச்சு நாடுகளுக்கு வெற்றியென்பது கிடையாது. எனக்கு சமீபத்தில் கிடைத்த செய்தியிலிருந்து இதைச் சொல்லுகிறேன். நாம் தோற்றுப்போவோமென்று நினைப்பதற்கிடமேயில்லை. நான் பிரஸிடெண்டு என்ற ஹோதாவில் நீங்கள் எல்லாக் காரியங்களையும் தேச க்ஷேமார்த்தத்திற்காகச் செய்யவேண்டுமென்று கட்டளையிடுகிறேன். நாஸிகள் ஜயித்தால் அயர்லாந்தேது? உலகத்தை அடிமையாக்கிய பிறகு அயர்லாந்துக்குமட்டும் சுயேச்சை நிற்குமா? தவிர அஸோர்ஸும் நிலைக்குமா? ஹவாயானது பஸிபிக் சமுத்திரத்தில் நம்முடைய பாதுகாப்பெல்லையென்கிறோம். ஆனால், அஸோர்ஸானது ஹவாயைக்காட்டிலும் சமீபமான இடமல்லவா" என்று பிரஸிடெண்டு ரூஸ்வெல்ட் எடுத்துக்காட்டினார்.

யுத்த தளவாடங்களை வாடகைக்குக் கொடுப்பதோடும், 60 கப்பல்கள் பிரிடனுக்கு விற்கப்போவதோடும், மேற்கொண்டு வியாபாரக்கப்பல்கள் பல புதிதாகக் கட்ட பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட் ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறார்.

பொதுஜன அபிப்பிராயத்தைக் கண்டுபிடிக்க ஏற்பட்டிருக்கும் காலம் இன்ஸ்டிட்யூட்டின் கணக்குப்படி அமெரிக்காவில் இப்பொழுது 100-க்கு 60-பேர்கள், யுத்தத்தில் சேரும்படி இருந்தாலும் சரி, எப்படியாவது பிரிட்டனுக்கு உதவி செய்யவேண்டுமென்ற அபிப்பிராயம் கொண்டிருக்கிறார்கள்.

## இதாலி.

சமீபத்தில் முஸோலினியை, மிஸ்டர் சர்ச்சில் கண்டித்ததற்குப் பதிலாக உத்தியோக முறையில் இதாலிய அரசருக்கும் முஸோலினிக்கும் ஒற்றுமை மாறவில்லையென்று சொல்லிக்கொண்டபோதிலும் இதாலி தேசமானது தற்போது எரிமலைபோல் புகைந்துகொண்டு வெடிக்கும் தருணமாயிருக்கிறதென்று நினைக்கவேண்டியிருக்கிறது. 'போதும், சண்டை போதும்' என்று நோட்டீஸ் பத்திரங்கள் சுவருகளில் ஒட்டப்படுகின்றன. மண்டையோட்டையும், எலும்புகளையும், சித்திரம் வரைந்து, அவைகளுக்கிடையே, 'எம்' என்ற அக்ஷரம் முஸோலினியையும், யமனையும் குறிக்கும்படி எழுதப்படுகிறது. பிரென்னரிலும், டிரீஸ்டிலும், ஜெர்மன் துருப்புகள் ஏராளமாய் வந்துகொண்டிருக்கின்றனவாம். விமானங்களின் பாகங்களும், டாங்குகளும், டார்பிடோக்களும், நீர்மூழ்கிகளும் நாள் தவறாது இதாலிக்குள் வந்துகொண்டிருக்கின்றன. ஜெர்மன் விமானங்கள் பிரிண்டிஸியுக்கும், பாரியுக்கும் வந்திருக்கின்றனவாம். ஜெர்மன் ரகஸிய போலீஸார் வந்துவிடுவார்களோவென்று இதாலியர்கள் பயப்படுகிறார்கள். பொருளாதார நிலைமையும் அச்சத்தைத் தருகிறது. காப்பிக்கொட்டை, சர்க்கரை போன்ற சாமான்கள் அகப்படுவது துர்லபமாய் விட்டது. பிரயாணிகள் போக ரயிலில் இடம் கிடையாது. சொந்த மோட்டார்கள் ஓடுவதைக் காணோம். சமீபத்தில் ஏற்பட்ட தோல்விகளாலும், யுத்தகளத்திலிருக்கும் சிப்பாய்களிடமிருந்து செய்திகள் கிடைக்காததாலும், யுத்தத்தில் பிரவேசித்ததற்கே காரணம் புரியாததாலும் ஜனங்கள் மனம் கலங்கி நிற்கிறது. முஸோலினி கைவசமிருக்கும்

அதிகாரம் இதாலிய அரசருடைய ஆதரவு பெற்ற படோக்ளியோவுக்கு மாறுமோ வென்று வதந்திகள் ஏற்பட்டிருக்கின்றன. பிரிடனும் இதாலியும் பிரத்தியேகமாக உடன்படிக்கை செய்து கொள்ளுவார்களோவென்றும் நினைக்கப்படுகிறது.

இதாலி படும் கஷ்டங்களுக்கெல்லாம் முஸோலினி ஒருவரே ஜவாப்தாரி என்று மிஸ்டர் சர்ச்சில் செய்த பிரசங்கம் ஜனங்கள் மனதில் நன்ருய் பட்டிருக்கிறது. எவ்விதம் ரோமாபுரியில் முன்னொரு காலத்தில் அந்தோனியின் பிரசங்கத்தைக் கேட்டு புருடஸை ஜனங்கள் வெட்டுவோம், எரிப்போமென்ருர்களோ, அதே மாதிரி இப்பொழுது முஸோலினியின் கதி வந்துவிட்டது. இவர் ஒரு போலி ஸீஸர், அந்தோனியின் பிரசங்கத்துக்குப்பின் புருடஸ் அவஸ்தைப் பட்டதுபோல் இவர் கஷ்டப்படுகிருர்.

இனி, இதாலியில் சைன்யத்துக்குக் கண்டு மிஞ்சிய ஆகாரத்தை மட்டும் பொது ஜனங்களுக்குப் பங்கிட்டுக் கொடுக்கப்போகிருர்கள். அடுத்து மோசம் செய்யும் குற்றத்துக்கும் பணத்தை மறைத்து ஒளிப்பவர்களுக்கும் மரண தண்டனை விதிக்கப்போகிருர்களாம்.

## பிரான்ஸ்.

பிரெஞ்சு கப்பற் படையை கொடுக்க முடியாதென்று பிடேன் உறுதியோடு மறுத்து, அந்தச் செய்தியை, ஜெர்மானியருக்கு மித்திரரான டார்லானைக் கொண்டே கிருஸ்மஸ் பண்டிகையன்றைக்குச் சொல்லச் சொன்னதாக வதந்தியை ஸ்வதந்திர பிரெஞ்சு அறிக்கையொன்று வெளிப்படுத்துகிறது. சமாதானம் (ஆர்மிஸ்டிஸ்) செய்து கொண்டகாலத்தில் கப்பற்படை ஒதுக்கப்பட்டதென்றும், புது அரசியலுக்கு பிரான்ஸ் சம்மதம் கொடுத்தபோது, பொருளாதார விஷயங்களைப்பற்றி சம்மதம் கொடுக்கப்பட்டதேயொழிய, ராணுவ விஷயங்களைப் பற்றியில்லை என்றும், பிரஞ்சு சாம்ராஜ்ய க்ஷேமத்துக்காக பிரஞ்சு கப்பற்படை அவசியம் வேண்டுமென்றும், ஏதாவது நிர்ப்பந்தப்படுத்திஞல் பிரஞ்சு கப்பற்படை டுலூனை விட்டு, வட ஆபிரிக்காவுக்கு அப்புறப்படுத்தப்படுமென்றும், வட ஆபிரிக்காவில் ஜெனரல் வெய்காண்டின் கீழ் 40,000 சைன்யம் தயாராயிருப்பதாயும் சொல்லப்படுகிறது.

பாரிஸுக்குப் போன டார்லான் திரும்பி வந்துவிட்டார். எல்லாம் மூடு மந்திரமாயிருக்கிறது. ஜெர்மானியர்களின் தேவைகளை பிடேன் அடியோடு மறுத்ததாகவும் தெரியவில்லை. வேருெரு சூக்ஷிக்காக இம்மாதிரிப் பேச்சுகளும் நடப்பதாகவும் சந்தேகப்படவேண்டியிருக்கிறது.

## ஜெர்மனியும், அது ஆக்கிரமித்திருக்கும் நாடுகளும்.

வெண்ணெயிலிருந்து பீரங்கிகளை உற்பத்தி செய்கிறதென்பதற்கு உதாரணமாக இப்பொழுது ஜெர்மனியில் உருளைக்கிழங்கு, பீட்-ரூட், சக்கரை, கோதுமையிலிருந்து பெட்ரோலிறக்கப்படுகிறது. 10 டன் உருளைக்கிழங்கிலிருந்து ஒரு டன் பெட்ரோலும், 12 டன் பீட்-ரூட்டிலிருந்து ஒரு டன் பெட்ரோலுமிறக்கலாம். இதற்காக, மீதப்படும் விளைபொருள்களையும், பிடிபட்ட நாடுகளில்

கொள்ளையடிக்கும் சாமான்களையும் இவ்விதமாக ஜெர்மானியர்கள் உபயோகிக்கிறார்கள்.

யுத்தத்துக்கு ஆட்களைச் சேர்ப்பதிலிருந்து கூலி வேலைகளுக்கு ஆட்கள் குறைந்துபோய், சிறுவர்கள், பென்ஷன்தாரர்கள், ஸ்திரீகள், யுத்தத்தில் கைது செய்தவர்கள்—முதலியவர்களை கட்டாயப்படுத்தி வேலை செய்யச் சொல்லுகிறார்கள்.

நார்வேயில், பன்றியிறைச்சி, ஆட்டு மாமிசம், முட்டை இவைகளின் பஞ்சம் ஏற்பட்டுவிட்டது. ஆஸ்லோவிலிருந்து தினசரி 10,000 பவுண்டு இறைச்சி ஜெர்மனிக்கு அனுப்பப்படுகிறது.

இப்பொழுது ஸர்வ ஜனங்களும் விவசாயத்துக்குப் போகும்படி கட்டாயப்படுத்துவதால் ருமேனியாவில் நகரவாசிகளான பல தொழிலாளிகள் வேலையில்லாது திண்டாடுகிறார்கள்.

### பிரிடன்.

யுத்த நிதியை அதிகப்படுத்த ஜனவரி 2-ம் தேதி முதல் 100-க்கு $2\frac{1}{2}$ வட்டிக்கு நாஷனல் யுத்தக் கடன் பத்திரங்கள் வெளிவரும்.

### தாய்லாந்து.

எல்லைப்புறங்களில் சில்லரைச் சண்டைகள் நிற்கவில்லை. தாய்லாந்தின் பிரதம மந்திரியாகிய லுவாங் பீபுல் ஸங்கரம் பிரிடன் தாய்லாந்தினிடத்தில் வாத்ஸல்யம் வைத்திருப்பதாயும், அதினால் பர்மாவுக்கும் தாய்லாந்துக்கும் ஏற்பட்ட எல்லைப்புறத்தகராறை ஒன்றை சுலபமாய்த்தீர்த்து வைத்ததாயும், ஏதோ எல்லையைத் திருத்த இரண்டு சிறு பாகங்களைக் கொடுத்துவிட்டால் பிரெஞ்சு இந்து-சைனா மனஸ்தாபம் தீர்ந்து விடுமென்றும், ஜப்பான் சொல்லும் புது உலக-அமைப்பை, தாய்லாந்தின் ஸ்வதந்திரத்துக்கு ஒத்திருக்கிறதாவென்று பரிசோதித்து வருவதாயும் பத்திர நிருபர்களுக்குக் கொடுத்த ஒரு பேட்டியில் விவரித்துச் சொன்னார்.

## ஆபிரிகாவில் யுத்தம்.

### லிபியா.

கடைசியாக யேற்படப்போகும் எதிர்ப்புக்கு உதவியாக பார்டியாவின் கிழக்கிலும், தெற்கிலுமிருக்கும் இதாலியத் துருப்புகள் விரட்டப்படுகின்றன.

### அபிஸீனியா.

இதாலியர்கள் கைவசத்திலிப்பொழுதிருக்கும் கஸாலா பாகத்தின் எல்லைப்புறத்தில் ஓயாது சண்டை நடக்கிறது: பிரிடிஷ் துருப்புகள் ஒளிந்து சிறு சண்டைகளைப் படுகின்றன. சில சமயங்களில் பெரும் சண்டைகளும் நடக்கின்றன. அபிஸீனியா தேசத்துக்குள் கலகங்களேற்பட்டுக் கொண்டிருக்கின்றன. சைன்யங்களிலிருந்து ஓடிவந்தவர்கள் கலகக்காரர்களோடு சேர்ந்துகொள்ளுகிறார்கள்.

## இதாலிய-கிரேக்க யுத்தம்.

எல்பாஸானுக்குப்போகும் வழியிலிருக்கும் லின் என்ற ஸ்தலத்தையும், மற்றும் மூன்று கிராமங்களையும், 5,000 அடி உயரமுள்ள மலைகள் மேல் போர் புரிந்து கிரேக்கியர்கள் பிடித்துவிட்டார்கள்.

---

| தேதி. | பிரிடிஷ், கிரேக்க விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | பிரிடிஷ் கிரேக்க விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **23—12—40.** (திங்கட்கிழமை). | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும். | | |
| | ஹிட்லர் (Hitler) ஆக்ரமித்துக்கொண்டு இங்கிலாந்தின்மேல் படையெடுக்க உபயோகப்படும் துறைமுகங்கள்.—இங்கிலீஷ் கால்வாய் (English Channel). | ...... | தகர்க்கப்பட்டன. |
| | தொழிற்சாலைகள்.—ரைன்லாந்து (Rhineland), லட்விக்ஷாபன் (Ludwigshafen), உள்பட. | 1 விமானம். | பலத்தசேதம். |
| | இதாலிய ஆபிரிக்கா (**Africa**). | | |
| | காஸ்டல் பெனிடோ (Castel Benito), விமானநிலயம், துறைமுகம், மின்சார உற்பத்திச்சாலை, மற்றும் இதர ராணுவ முக்யமுள்ள இடங்கள்.—ட்ரிபோலி (Tripoli). | ...... நஷ்டமில்லை. | பல இடங்களில் தீயும், வெடிகளும் கிளம்பின. |
| | விமானச்சண்டை.—பார்டியா (Bardia), டொப்ருக் (Tobruk), பிரதேசம். | ...... | 4 விமானங்கள். |
| | ஜல சப்ளை ஆலைகள், விமான நிலயம்.—அஸாப் (Assab). | ...... | ...... |
| | வேவு பார்த்தல்:—கலாபத் (Gallabat), பிரதேசம். | ...... | ...... |
| **24—12—40.** (செவ்வாய்க்கிழமை). | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும். | | |
| | இன்றைக்கு விமானப்படையெடுப்பில்லை. | | |
| | இதாலிய ஆபிரிக்கா (**Africa**). | | |
| | விமான நிலயங்கள்:—கஸாலா (Gazala). | ...... | பலத்தசேதம். |
| | வேவு பார்த்தல்.—மேற்குப் பாலைவனம் (Western Desert). | ...... | 1 விமானம். |
| | வெடிமருந்து கிட்டங்கிகள்.-ஜுன்னு(Junna). | ...... | வெடித்தது. |
| | கட்டடங்கள்.—பர்யி (Burye). | ...... | தீப்பிடித்தன. |
| | சாமான் கிடங்குகள்.—வேறு ஒரு இடத்தில் | நஷ்டமில்லை. | |

| தேதி. | பிரிடிஷ், கிரேக்க விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | பிரிடிஷ், கிரேக்க விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **24—12—40.** (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | அல்பேனியா (Albania). | | |
| | **துறைமுகம், விமான நிலயம்.**—வலோனு (Valona). | ...... | தரையில் இருக்கும் பல இதாலிய விமானங்கள் தீக்கிரையாயின. |
| | இதாலி (Italy). | | |
| | நேபிள்ஸ் (Naples). | ...... | துண்டு பிரசுரங்கள் போடப்பட்டன. |
| **25—12—40** (புதன்கிழமை). | | | |
| | மத்திய கிழக்குப் பிரதேசத்திலாவது, ஐரோப்பாவிலாவது இன்று பிரிடிஷ் விமானப் படையெடுப்பு இல்லை. அதற்கு பதிலாக கார்ப்பூ (Corfu) தேசத்திலுள்ள குழந்தைகளுக்கு கிருஸ்மஸ் வெகுமதிகளை ஆகாய விமானங்களிலிருந்து கீழே போட்டார்கள். | ...... | ...... |
| **26—12—40** (வியாழக்கிழமை). | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும். | | |
| | **பகலில்:—பல விமான நிலயங்கள்.**—பிரிடனி (Brittany). | ...... | பலத்தசேதம் 1 விமானம். |
| | **கப்பல்கள்.**—லா ட்ரபோர்ட் (La Treport). | ...... | ...... |
| | ஸப்மரைன் (Submarine) நிலயம் லோரியான் (Lorient). | ...... | ...... |
| | **இரவில்:—விமான நிலயம்.**—போர்டோ (Bordeaux). | ...... | ...... |
| | இதாலிய ஆபிரிக்கா (Africa). | | |
| | **விமானச் சண்டை.**–மேற்குப் பாலைவனம் (Western Desert). | ...... | 2-விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. 4-விமானங்கள் நாசமாயின. |

| தேதி. | பிரிடிஷ், கிரேக்க விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | பிரிடிஷ், கிரேக்க விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **26—12—40.** | (வியாழக்கிழமை)—தொடர்ச்சி. | | |
| | **அல்பேனியா (Albania).** | | |
| | சாமான் கிடங்குகள், ரயில்பாதைகள்.—க்ரியோனீரே (Krionero)—வலோனு (Valona)-வுக்குச் சமீபத்தில். | ...... | ...... |
| **27—12—40.** | (வெள்ளிக்கிழமை). | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | பகலில்.—கப்பல்கள்—எகர்ஸண்ட் (Egersund) துறைமுகம், ஹாகீஸண்ட் (Haugesund). | ...... | 1 கப்பல் தீக்கிறையாகியது. |
| | இரவில்.— ஸப்மரைன் (Submarine) நிலயம்—லோரியான் (Lorient). | ...... | பல இடங்களில் பெருந் தீ சூழ்ந்தது. |
| | சைன்யங்கள் வசிக்குமிடங்கள், மின்சார உற்பத்திச்சாலை, சாமான் கிடங்குகள்.—லோரியான் (Lorient). | | |
| | பாக்-வுல்ப் (Focke-Wulf), விமான நிலயம்.—போர்டோ (Bordeaux). | | |
| | படையெடுப்பு ஸ்தலங்கள்.-கலே (Calais) யிலிருந்து புலாயின் (Boulogne) வரை | ...... | சமுத்திரக்கரை முழுவதும் ஒரே தீமயம். |
| | கப்பல் கட்டுமிடங்கள்.—ஸெயிண்ட் நாஸேர் (St. Nazaire), ஸெயின்ட் இங்கில்பர்ட் (St. Inglebert). | ...... | ...... |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | விமானச்சண்டை.—ஜெடாரெப் (Gedaref) | ...... | 1 விமானம். |
| | இதாலிய சைன்யங்கள்.—கஸாலா (Kassala), | ...... | பலருக்குக் காயம். |
| | ராணுவ தளவாடக் கிடங்கு, வண்டிகள் நிறுத்திவைக்கும் இடங்கள்.—அஸாப் (Assab). | ...... | ...... |
| | வேவுபார்த்தல்.—விரோதியின் நாடுகள். | | |
| | **அல்பேனியா (Albania).** | | |
| | இதாலியத் துருப்புகள்.—அல்பேனியா (Albania). | | |

| தேதி. | பிரிடிஷ், கிரேக்க விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | பிரிடிஷ் கிரேக்க விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **28—12—40.** (சனிக்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | எண்ணெய்.—ராட்டர்டாம் (Rotterdam), ஆண்ட்வர்ப் (Antwerp). | ...... | தீப்பிடித்தது. |
| | படையெடுப்புத் துறைமுகங்கள்.—புலாயின் (Boulogne) செர்பார்க் (Cherbourg). | ...... | பலத்தசேதம். |
| | கப்பல் நிற்குமிடங்கள், கப்பல்கள், ஆலைகள்.—லோரியான் (Lorient). | ...... | தீயும், வெடிகளும் கிளம்பின. |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | விமானச்சண்டை.—மேற்குப் பாலைவனம் (Western Desert). | நஷ்டமில்லை. | 2 விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. 5 நாசமாயின. |
| | **அல்பேனியா (Albania).** | | |
| | கப்பல்கள், துறைமுகம்.—வலோனா (Valona) | ...... | ...... |
| **29—12—40.** (ஞாயிற்றுக்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | ராணுவமுக்கியமுள்ள இடங்கள்.—பிராங்பர்ட் (Frankfurt) பிரதேசம். | ...... | ...... |
| | ஸப்மரைன் (Submarine) நிலையம்.—லோரியான் (Lorient). | ...... | ...... |
| | **இதாலி (Italy).** | | |
| | நேபிள்ஸ் (Naples) | ...... | கட்டடங்கள் இடிந்தன. பலருக்குக் காயம். |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | விமானங்கள் இறங்குமிடங்கள்.—டிமிமி (Tmimi), டெர்னா, (Derna), கஸாலா (Gazala). | ...... | தீப்பிடித்தன. |
| | **அல்பேனியா (Albania).** | | |
| | சைன்யங்கள், போக்குவரத்து சாதனம், மோட்டார் வண்டிகள் நிற்குமிடம், ராணுவ சாமான் கிடங்குகள் இரண்டு சாமான் ஏற்றிச்செல்லும் படகுகள், ஒரு க்ருயிஸர்.—வலோனா (Valona). | ...... | பலத்த சேதம். |

| தேதி. | விரோதி விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | விரோதியின் விமான நஷ்டம். | பிரிடிஷ், கிரேக்க விமான நஷ்டமும் படையெடுப்பால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **24—12—40.** (செவ்வாய்க்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இரவில்.—லாங்கஷயரி (Lancashire)ல் ஒரு பட்டணம்; கிழக்கு இங்கிலாந்தி (England)ல் இரண்டு ரயில் வண்டிகள். | ...... | சேதமில்லை ஒரு போர்வீரன் உயிர் துறந்தான். |
| | **பிரிடிஷ் ஆபிரிக்கா (Africa).** | | |
| | ஸோலம் (Sollum). | ...... | சொற்பச் சேதம்; சிலருக்குக் காயம். |
| **25—12—40.** (புதன்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பகலில்.—ஆர்க்னீஸ் (Orkneys); ஸ்காத்லாந்தின் கடற்கரை (ஜெர்மன் விமானங்கள் குண்டுகள் போடாமல் பறந்தன). | 1 விமானம். | ...... |
| | இரவில்.—படையெடுப்பே இல்லை. | ...... | ...... |
| | **கிரீஸ் (Greece).** | | |
| | கார்ப்பூ (Corfu). | ...... | 21 ஜனங்கள் இறந்தனர். 31 ஜனங்களுக்குக் காயம். |
| **26—12—40.** (வியாழக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பகலில்.—ஷெப்பி (Sheppey)த்திவு. | ...... | சேதமே யில்லை. |
| | இரவில்.—படையெடுப்பே யில்லை. | ...... | ...... |
| | **பிரிடன் (Britain).** | | |
| **27—12—40.** (வெள்ளிக்கிழமை). | | | |
| | பகலில்.—தென்கிழக்கு இங்கிலாந்தி (England)ல் ஒரு பட்டணம். | ...... | ஒருவருக்கும் காயமில்லை சேதமே யில்லை |
| | இரவில்.—லண்டன் (London); இங்கிலாந்தி (England)ல் சில இதர பாகங்கள். | ...... | பெரிய தீ கிளம்பிற்று சிலருக்குக் காயம். |
| **28—12—40.** (சனிக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இரவில்.—தென்மேற்கு இங்கிலாந்தி (England)-ல் ஒரு பட்டணம். | ...... | சொற்பச்சேதம் சிலருக்குக் காயம். |

| தேதி. | விரோதி விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | விரோதியின் விமான நஷ்டம். | பிரிடிஷ், கிரேக்க விமான நஷ்டமும்; படையெடுப்பால் விளைந்த சேதமும்; |
|---|---|---|---|
| **28—12—40.** (சனிக்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **கிரீஸ் (Greece).** | | |
| | கார்ப்யூ (Corfu). | ...... | ...... |
| **29—12—40** (ஞாயிற்றுக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பகலில்.—வடமேற்கு இங்கிலாந்தி (England)-ல் ஒரு இடம்; ஸப்பக் (Suffolk) கடற்கரையில் ஒரு பட்டணம், கெண்ட் (Kent) கட்ற்கரையில் இரண்டு பட்டணங்கள். | ...... | சொற்பச் சேதம் சிலருக்குக் காயம் சிலர் இறந்தனர். |
| | இரவில்.—லண்டன் (London); ஒரு தென்மேற்குப் பட்டணம். | ...... | சேதமே யில்லை. |
| **30—12—40** (திங்கட்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இன்று காலநிலை சரியாயில்லாததால் விமான நடவடிக்கையே இல்லை. | ...... | ...... |

# யுத்தக் குறிப்புகள்.

---

## சாசுவதமான ஆசை.

புதிய வருஷம் இன்பகரமாகவிருக்கவேண்டுமென்று ஒருவருக்கொருவர் உபசாரம் சொல்லுவதில் எல்லோருமே இவ்வருஷம் ரொம்ப சங்கோஜப்படுகிறார்கள். யாரேனும் சொன்னால், சொல்லுகிறவர் கண்டிக்கப்படுகிறார். "இன்பகர மானதா? இன்னும் இன்பகரமாகவும் இருக்கலாம் ஒருவேளை, ஆயினும்........" என்னமோ, புரியவில்லை. இன்பம் என்பது, உலகத்தில் மற்றெல்லா விஷயங் களைப் போலவே, தாரதம்மிய பதம். புது வருஷத்தில் மனிதர்களுக்குச் சில சௌகரியங்கள் ஏற்பட்டால், உதாரணமாக ஒரு முஸோலினி ஒழிவது, அல்லது நாஸி வர்க்கத்தாருக்குள் கதிகலக்கம், இங்கிலாந்து, அமெரிக்கா இவர்களுக்குள் எண்ணத்திலும் காரியாம்சையிலும் நெருங்கின ஒத்துழைப்பு ஏற்படுவது, அல்லது உலகம் முழுமையுமே, பலமே தர்மம் என்ற கொள்கையை உதரித் தள்ளுவது, அல்லது இந்தியாவில் ஒத்துழையாமையென்பது ஒழிவது, இவ்விதமாக ஏதேனும் நன்மை ஏற்பட்டால், நாம் ஏன் ஒருவருக்கொருவர் புது வருஷத்திற்குறிய உபசாரங்களும் நன்மொழிகளும் சொல்லிக்கொள்ளக் கூடாது. இதைப் படிப்பவர் அனைவருக்கும் இந்த நன்மொழி கூறுகிறோம்.

## கிரிஸ்மஸ் பண்டிகை.

பிரிடனிலாவது ஐரோப்பா கண்டத்திலாவது கிரிஸ்மஸ் பண்டிகை காலத்தில் விமானத் தாக்கல்கள் கிடையாது. இரண்டு நாள் பொழுதிற்கு அமைதியிருந்தது. ஆனால், முன்னேகூடியே இப்படி ஏற்பாடு செய்துகொள்ள படவில்லை யென்று இருதிறப்பாரும் சொல்லுகிறார்கள் கிரிஸ்மஸ் பண்டிகையின் பொழுது அமைதியாயிருப்பதென்ற எண்ணத்தையே வின்ஸ்டன் சர்ச்சில் மறுதளித்தார். ஏதோ இங்கிலீஷ்காரர் விமானத்தாக்கல் செய்யாதிருந்தால் தானும் சும்மா விருப்பதாக ஹிட்லர் சொன்னதாக உலாவிவரும் அசம்பாவிதமான வதந்தி ஆதரிக்கப்படவில்லை. ஒருவேளை, மிருகத்தன்மை பொங்கிக்கிடக்கும் இந்நாளிலும், தயையும் அனுதாபமும், அல்லது உலகம் முழுவதுமே பரவிய ஒருவித தயா உணர்ச்சியும், அல்லது மனிதரின் குற்றங்குறைகளைக்கண்டு அக்கிரமமென்ற உணர்ச்சியும், இவையெல்லாம் இன்னும் அழிபடவில்லை போலும். தாக்கல்கள் இல்லாததற்கு இது ஒரு நல்ல சமாதானம் என்றே சொல்லவேணும்.

## உண்மையான சரக்கு.

லண்டனில் ஒரு அம்மாளிடமிருந்து எனக்குக் கடிதம் வந்திருக்கிறது. அவர் ஏ. ஆர். பி. சிப்பந்தி. அக்கினி வாதையடக்கும் நிலையமொன்றில் 'டெலிபோன்' வேலைக்காரி. அவர் அக்டோபர் மாதம் இருதியில், அதாவது ஜெர்மானியரின் தீவிர எதிர்ப்பு அடங்கிய சமயத்தில், எழுதியது சாரமுள்ளது.

அச்சில் பார்க்கும்போது பயங்கரமாகவிருக்கிறது. ஆயினும், அக்கடிதம் எழுதினவுடனே தொலையிலுள்ள அவர் பந்துக்களுக்கும் சிநேகிதர்களுக்கும் இனும்கள் வாங்க அவர் போனுரென்பதும் அவர் கடிதத்தில் கண்ட பேர்வழி களிடமிருந்து உற்சாகம் நிரம்பிய கடிதங்கள் வகையரா இங்கு வந்து சேர்ந்திருக்கின்றனவென்பதும் கவனிக்கத்தக்கது. அவர் கடிதத்தின் முத்தாய்ப்பு மிகவும் கவனுர்கமானது. "எதையும் நாம் நிர்வகிக்கலாமென்ற முடிவிற்கு நான் வந்துவிட்டேன். நான் சௌக்யமாக இருக்கிறேன். ஒருவேளை இரவில் தூக்கம் விழிப்பதால் உடம்பில் குறைந்த கனத்தை பகலில் உறங்கி திரும்பவும் அடைகிறேன் என்பதினுலிருக்கும். நிஜத்தில் 4, 5, பவுண்டு கனம் ஜாஸ்தியாகி யிருக்கிறது! நேர்முகமாகப்பார்த்த மின்னல் பிரமாணமான எதிர்ப்பு இதெல்லாம் நடக்கும்போது வெகு பயங்கரமான விமானத் தாக்கல் ஏற்பட்டது. அது சாதாரணமானதல்ல. இந்த மாதம் லண்டனிலிருந்தவர்கள், 14, 15 தேதி களை மறக்கமாட்டார்கள். ஒவ்வொரு பிராஞ்சத்திலும் ஒரே மாதிரிதான். சென்ற யுத்தத்தில் மெய்டாவேலில் விழுந்த வெடிகுண்டு ஞாபகமிருக்கும். அதைப்போல, இரவு 7-மணி முதல் காலை 7-மணிவரை விடாமல் குண்டுகள் போடப்பட்டன. சாதாரணமாக குண்டுகள் போடுவதென்ருல், அலை, அலையாக விட்டு விட்டு போடுவதுண்டு, இடையில் 1-மணி நேரம் நிம்மதியாகவிருக்கும். ஆனுல் மேலே சொன்ன இரண்டு இரவுகளிலும் இடைவிடாமல் குண்டுகள் போடப்பட்டன. நாம் தங்கியிருந்த கட்டிடங்கள் தப்பிக்குமென்று எண்ணவே சாத்தியமில்லாமலிருந்தது. நெருப்பு குண்டுகளோவென்ருல், இரவு முழுதும் மழை பெய்வதுபோல் வர்ஷித்துக்கொண்டிருந்தன. 14-ம் தேதியன்று நான் "ஸ்டான்ஹோப் கார்டன்ஸ்"ஸில் வழக்கம்போல் முன் அறையில் இரண்டு நாற்காலிகளில் "தூங்கிக்கொண்டிருந்தேன்". ஏதோ விழுந்த சத்தம் கேட்டது. அந்த சத்தம் எங்களுக்கு ரொம்ப பழக்கமாகிவிட்டது. அப்போது மணி 2. ஒரு 'டார்ச்சு' எடுத்துக்கொண்டு மாடியில் என் அறைக்கு ஓடினேன். ஒரு வழியாய் குண்டு ஏதேனும் விழுந்து அறை நெருப்புப் பற்றிக்கொண்டுவிட்டதோ வென்று பார்க்க ஓடினேன். அறையில் கோளார் ஒன்றுமில்லை. வெளியில் பார்த்தேன். ஏதோ நெருப்புப் பற்றியெறிந்தது. குண்டு போடுபவர்களுக்குச் சொக்கப்பானைபோல் வெளிச்சம் கொடுத்தது. கீழே ஓடினேன். விமானத் தாக்கல் காபந்து உத்தியோகஸ்தர் ஒருவர், அன்று விடுமுறையுள்ளவர், பக்கத்திலிருந்த மணல் மூட்டைகளிலிருந்து மணல் கொண்டுவரவேணுமென்று கூச்சல் போட்டுக் கொண்டிருந்தார். நான் பார்த்த சொக்கப்பானையை அணைப்பதில் சிலர் கவனமாயிருந்தார்கள், அவர்களிடம் கொஞ்சம் மணல் கொண்டுபோய்க் கொடுத்தேன். நான் போகுமுன் அது அநேகமாய் அணைந்துவிட்டது. மறுநாள் கேள்விப்பட்டேன், அதாவது, அஸ்திவார உக்ராணத்தில் ஒரு சொக்கப்பானையும் பின் பக்கமுள்ள லாயத்தில் 8, 9 சொக்கப்பானைகளும் எறிந்தனவாம், ஆனுல் அவைகள் சீக்கிரம் அணைக்கப்பட்டனவாம். வீடுகளில் ஓடுகள் பேரில் விழுந்து உடன்காலத்தில் கவனிக்கப்படாத குண்டுகள்தான் விபத்தான நெருப்புகளை கிளப்பிவிடுகின்றன.

## மறுநாள்.

மறுநாள் இரவு, நெருப்பணைக்கும் நிலையங்களில் 96 முறை சகாயம் தேடினார்கள். அது கென்ஸிங்டன் நெருப்பு நிலையத்தில் இங்கே 61 தனி நெருப்பு ஜவாலைகள் கடைசியாகத்தேறின. மறுமுறை நான் வந்து பார்க்கும்போது, ஏதோ குழைந்தைகள் ரஸ்தாவில் மணல் கோட்டைகள் கட்டி விளையாடியதுபோல் இருந்தது. கிராம்வெல் ரோட், கிளாஸ்டர் ரோட் மூலையில் வெடிக்காத குண்டு ஒன்று கிடந்தது. வண்டிகள், நடப்பவர்கள் எல்லோரும் அதன் கிட்ட நெருங்காமல் வேறு பாதைகளில் திருப்பப்பட்டார்கள். இரண்டொருநாள் கிரமித்து அந்த குண்டு வெடித்து அந்த ஜாகாவை நாசமாக்கி விட்டது. கிராம்வெல் கட்டிடங்கள், பாவம், சின்ன பின்னமாகி விட்டன. என்ன காரணமோ புரியவில்லை, 'எர்ள்ஸ் கோர்ட்' என்ற இடத்தை விடாமல் தாக்குகிறார்கள். டையாஸ் குடும்பத்தாரை பார்க்க அன்றுபோனேன்; அந்த லக்கில் ஒரு ஜன்னலைக்கூட காணோம்? கட்டிடத்தில் முன்பாகத்தில் தவிர, வேறுஎங்கேயும் ஜன்னல்கள் காணோம். பின்பக்கம், குழந்தைகள் அறை, என் அறை, தகப்பனார் அறை, எல்லாம் உடைபட்டு கிடந்தன. அடுத்த வீட்டு பக்கம் இன்னும் மோசம். பாவம், டையாஸ் குடும்பத்தார் ரொம்ப அனுபவித்து விட்டார்கள். இந்தத் தாக்கல் துவக்கிய சமயத்தில், செயிண்ட் பிலிப் கோவில் பக்கம் அவர்கள் போயக்கொண்டிருக்கும்பொழுது ஒரு வெடி குண்டு விழுந்து எதிர்த்த வீட்டை உடைத்தெறிந்து விட்டது. இவர்களும் கீழே விழுத்தாட்டப்பட்டு இவர்கள் பேரில் சேதப்பட்ட சாமான்கள் விழுந்து காயப்படுத்தப்பட்டார்கள். அவர்கள் உயிர் தப்பித்தது தெய்வாதீனம். அன்று முதல் பிரதிதினமும் அவர்களைச்சுற்றி குண்டுகள் விழுந்த வண்ணமாகவே யிருக்கிறது. இது உண்மையென்று எனக்குத் தெறியும் ஏனென்றால் நெருப்பணைக்க வரவேணும் என்று, ஏர்ள்ஸ் கோர்ட் ரோட், கிராம்வெல் ரோட், கென்வே ரோட், சைல்ட்ஸ் ப்ளேஸ், காலி கடைக்கு பின்னுள்ள மோட்டார் சாலை, மற்றொரு சாலை, இவைகளிலெல்லாமிருந்து கூப்பிடுவார்கள். பிரதிதினமும் காலையில் உடைபட்ட வீடுகளின் தளவாடங்கள் அகற்ற வேண்டியிருக்கிறது. தங்கள் வீடுகளிலேயே குண்டுகள் விழுமென்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறதாகச் சொன்னார்கள். அன்றிரவு அங்கிருந்து அழைப்பு வந்தது, பிறகும் பல அழைப்பு வந்தது. நல்ல வேளையாக, நெருப்பு குண்டுகளாதலால் சீக்கிரம் அணைக்கப்பட்டன. ஒன்று எங்கள் வீடுகள் ஓட்டின்பேரில் விழுந்தது. ஸ்வேர்ட் ஹோட்டல் இரண்டுதரம் தாக்கப்பட்டது. ஆக்ஸ்போர்ட் சாலைக்கும் பிரகரம் கிடைத்தது. பெரிய அக்கினி வாதை ஏற்பட்டு அழிந்துபோன ஜான்லூயி கடை ஒன்று நீங்கலாக அந்தச் சாலையில் எப்போதும்போல் வியாபாரம் நடந்து வருகிறது. அங்கு கிளம்பிய நெருப்பு எனக்கு தெறிந்தது. கென்ஸிங்டன் ஹைஸ்டீரிட், பின்பக்கம் மறைவாக உள்ள இடங்கள்போக, அதாவது கென்ஸிங்டன் அரண்மனையில் ஒரு பாகம், ஹாலண்ட் ஹவுஸ், கோவில், பழைய படம் காட்டப்படும் விசித்திர சினிமா, முதலியவைகள்போக, இதுவரை தப்பி விட்டது. ஆனால் சனிக்கிழமை இரவு கென்ஸிங்டன் கோர்ட்டில் ஒரு குண்டும், கென்ஸிங்டன் தோட்டத்தில் ஒரு பட்டாள 'லாரி'யில் ஒருகுண்டும் விழுந்தது. ஒரு ஜன்னல்

கூட பாக்கி யில்லாமல் அந்த வட்டையிலுள்ளவீடுகள் சேதப்பட்டன. இவ்வளவு சின்னுபின்னம் எங்கும் பார்த்திருக்க மாட்டீர்கள்; இரண்டு நாள் பொழுதிற்கு உடைந்த கண்ணுடிகளை மண் வண்டிகளில் ஏற்றிக்கொண்டு, வெகு கஷ்டமான சுத்தப்படுத்திக்கொண்டிருந்தார்கள். ஜிப்ரால்டர் பக்கமிருந்து தஞ்சமாக வந்தவர்கள் தங்கியிருக்கும் இடங்களிலொன்ருன கென்ஸிஞ்டன் பாலஸ் ஹோட்டலில் ஒரு கண்ணுடிகூட இல்லை. பனியில்பாவம் விறைத்துப்போனுர்கள். அவர்களிருக்கும் மற்ருெரு ஹோடலான "கென்ஸிஞ்டன் மான்ஷன்ஸ்" மாடியில் ஒரு நெருப்புக்கூடு விழுந்தது. அவசியம் ஜிப்ரால்டருக்குத் திரும்பி விடுவது நலமென்று அவர்கள் நினைப்பார்களென்று நினைக்கிறேன்.

இவ்வளவு தைரியம் பொருந்திய இந்த அம்மாளுக்குக் கொஞ்சம் ரஜா கிடைத்தால் ரொம்ப நியாய மென்பதில் சந்தேகமில்லை. அஹிம்சையென்று உளருகிறவர்களில் யாரேனுமொருவர், அல்லது யுத்த வேலைகளைத் தடுப்பதற்காக, "எ" வகுப்பு அனுபவிக்கிறவர்களிலொருவர், அந்த அம்மாளுக்கு பதிலியாக விருக்க சம்மதிக்கக்கூடும்!

## நழுவும் ஆணிகள்.

நிலம், கடல், ஆகாயம் இவைகளில் கிடைக்கும் வெற்றிகளைப்பற்றி மித மிஞ்சி உற்சாகப்படுவது பேதமை. அவைகள் உற்சாகப்படுத்தக்கூடியவைதான், ஆனல், யுத்த தந்திரத்தில் அவை ஒரு அம்சம். ஆயினும், புது வருஷத்தில் உயர்ந்த யுத்ததந்திர முறைப்படி கவனிக்க நம்பிக்கைக்கு இடம் ரொம்பவிருக்கிறது. ஏனென்றால், ஜெர்மன் ஏற்பாடுகளும், அச்சுதேசத்தார் நிலையும், தடுமாறிக்கொண்டிருக்கின்றன. சேர்ந்தார்ப்போல் வெகு நாட்களாக முஸோலினி விரைவாகப் பின்வாங்கிவருகிருர்; ஆயினும் ஹிட்லர் கையை நீட்டியிழுக்கப் பார்க்கவில்லை. ஏன்? இவனைக்காட்டிலும் பிரான்ஸ் பிரயோஜனமாயிருக்கும் என்ற எண்ணத்தால்தான். இன்னுமொரு காரணமிருக்கலாம், கையாலாகாதது தான். மத்தியதரைக் கடல் பிரிடிஷ் ஆதிக்கத்திலிருப்பது, நடு நிலைமைகொண்ட பால்கன் நாடுகளில் அதிகரிக்கும் ஒற்றுமை, நாஸிதத்துவ வகையெல்லாவற்றையும் நசுக்கவேணுமென்ற அமெரிக்கத் தீர்மானம். இவையெல்லாம் ஹிட்லரைத் தன் நஷ்டங்களைக் குறைக்க ஏற்பாடு செய்யும்படிக்கும், முஸோலினியைக் கைவிடவும் 'விஷி', கவர்ன்மெண்டாரைத் தாஜாப்படுத்தியோ நிர்ப்பந்தப்படுத்தியோ மத்திய தரைக் கடலில் புகுந்து பிரிட்டிஷார் கவனத்தைமாற்றி, அந்தச்சமயம் பார்த்து பிரிடன்பேரில் படையெடுத்து ஜயமடைய ஒரு கைபார்க்கலாமென்று எண்ணும் படிக்கும் செய்கின்றன. முன்னே நியூரம்பர்க்கில் கோபல்ஸ் சொன்னுரே வரப் போகுதென்று, அதாவது, 1938-ல் நாஸிகட்க்ஷி கொண்டாடிய தினம், 1939-ல் அமைதி கொண்டாட்டதினம், 1940-ல் வெற்றி கொண்டாட்ட தினமென்று சொன்னுரே, அந்த யோசனைகள் இந்தப் பலிக்காததைவைத்து மேல் ஏற்பாடு செய்யும் யோசனைகளுடன் ஒத்துப்பாருங்கள்!

## 'விஷி' படும்பாடு.

பாவம், தளகர்த்தர் பிடேன் ஜயித்தவன் கையில் மாட்டிக்கொண்டு படும் பாடு பார்க்க விகாரமாயிருந்தாலும் ஏதோ முண்டிப்பார்க்கிறுர். அவர் ஒட்டிக் கொண்டு தொங்கவில்லே—டார்லான்மாதிரி செயலற்றும், இழுத்த இழுவைக்கும் வரும் லவால், ப்ளாண்டின்போல இவர் இல்லே. ஆனுல் அவரை இன்னொரு சனியன் பிடித்தாட்டுகிறது. அதாவது, ரிப்பன்டிராப்பின் ஐந்தாம்படையார் தேடிப் பிடித்த பெர்னுண்ட் டி பிரைனன் என்பவர். அரசியல் தந்திரமென்ற சாக்கடையி லிருந்து எடுக்கப்பட்டு, இந்தப்பிரபு (?) பாரிஸில் 'விஷி' கவர்ன்மெண்டா ரின் ஸ்தானீகராக இருப்பதுடன், ஜெர்மன் ஸ்தானீகரான ஹெர் அபெட்ஜுக்கு நல்ல ஜோடியாகவிருக்கிறுர். இந்தப்பிரபுவின் சரித்திரம் வெகு ரசம். பிரான்ஸில் பொன்னேயின் ரகசிய காரியஸ்தன். ரிப்பன்டிராப்பின் முக்கிய துப்பன், 1938-ல் பொன்னேயும் ரிப்பன்டிராப்பும் பிரஞ்சு—ஜெர்மன் உடன் படிக்கையைக் கொண்டாட விருந்தளித்த கமிட்டியின் தலேவர்; இவ்வளவும், இவர் யூதஸ்திரீயை கல்யாணம் செய்துகொண்டு, வெட்கமற்று நாஸித்துவத்தை ஆதரிக்கும் "லான்பர்மேஷன்" பத்திரிகைக்கு பொருளுதவிசெய்யும் ஒரு யூதபாங்கியிலிருந்து சம்பளம் பெற்றவராயிருந்தபோதிலும், இவருக்கு இவ்வளவு செல்வாக்கு; "மியூனிக்" உடன்படிக்கைக்குப்பின் நிரந்தரமான துப்பன் என்ற ஹோதாவில், "காரியமாக" பொன்னேயிடமும், ரிப்பன்டிராப்பிடமும் பிரயா ணம் செய்துகொண்டிருந்தார். போர் கிளம்பியவுடன் மறைந்தார்; ஒரு சமயம் மட்டும் நெஞ்சழுத்தத்துடன் சட்டசபையில் தோன்றினுர். ஆனுல், சேவகன் வெளியே தள்ளினுன். ஆனுல், ஜெர்மனியின் வெற்றிக்குப்பிறகு அமுங்கிக் கிடந்த இந்த ஆபாஸ ஜந்துக்களெல்லாம் மேலே கிளம்பி, தங்கள் நாட்டின் இளப்ப நிலேயையே ஆதாரமாகக்கொண்டு லாபமடைகிறுர்கள். பிரெஞ்சு, ஜெர்மன் ஒத்துழைப்பென்று ரேடியோமூலம் பறைசாத்துகிறுர்களே, இதுதான் அந்த ஒத்துழைப்பு.

## படத்தின் மற்றொரு பக்கம்.

ஒத்துழைப்பு என்றுல் பரிபூரண சரணுகதம் என்று நேசதேசத்தார்கள் மட்டும் எண்ணவில்லே. பிரஞ்சுக்காரர்களும் அதை அறிந்திருக்கிறுர்களென்பதற்கு நல்ல அடையாளங்களிருக்கின்றன. பிரிடன் பிராஞ்சு முழுவதும் அன்புடனும் மரியாதையுடனும் கருதப்படுகிறுர். லவால்கள், ப்ளாண்டின்கள், டிபிரீனுன்கள் எல்லோரும் காரியுமியப்படுகிறுர்கள். ஸெப்டம்பர், அக்டோபர் மாதங்களில் ஆங்கில விமானப் படையின் வெற்றிகள் என்ன, "பிரிடனின் படையெடுப்பு" பலிக்காமல் போனதென்ன, மத்தியதரைக்கடல் பிரதேசத்தில் தரையிலும் கடலிலும் வலுக்கும் ஆங்கில ஆதிக்கமென்ன, ஜெர்மன ஆக்கிரமத்தால் ஏற்படும் கஷ்டங்களென்ன (இவர்கள் ஆக்கிரமத்தால் பிரான்ஸிலேயே சாமான்கள் உணவு பொருள்கள் ஒன்றுமேயில்லே, பிரெஞ்சுக்காரர்கள் ஜெர்மன் துருப்புகளே "எல்லாம் தின்னிகள்" என்று வெறுக்கிறுர்களாம்) இவைகளெல்லாம் ஹிட்லரை கொஞ்சம் அடங்கியே போகும்படி செய்கின்றன. பிரெஞ்சு சாம்ராஜ்யம்

சம்பந்தப்பட்டவரையும் அவர் அடங்கியே போகவேண்டியிருக்கிறது. தளகர்த்தர் வேகாண் வட ஆபிரிக்காவில் இருக்கிருர். நாடு முழுதும் எதிர்க்கையில் சிக்கிக் கொள்ளும் தன்மைபதனை "சமாதானத்தையும்" நாஸிகள் கையாளாக இருக்க வேண்டிய விஷி கவர்ன்மெண்டார் அழிந்துவிடும்படி ஆத்திரம் கிளம்பக்கூடிய விதமாக பிசகான நடவடிக்கை செய்வதையும் பிரிட்டனைக்காட்டிலும் மும்முரமாக இவர் எதிர்ப்பவரென்று எல்லோருக்கும் தெரியும். இந்தக் காரணத்தால்தான், அச்சு தேசத்தாரிடம் ஸ்பெயின் ஆதரவு குறைகிறது. அதே காரணத்தால்தான் பிரான்ஸிடமிருந்து சில நாடுகள் கிடைக்கவேண்டுமென்று இதாலி கொண்டாடி வந்த பாத்தியங்களும் ஹிட்லரால் வாபஸ் வாங்கப்பட்டன.

---

# ஒரு குறிப்பிடத்தகுந்த முடிவுரை.

---

**(நவம்பர் 18-ம் தேதி டில்லி மத்திய சட்ட சபையில் கனம் ஸர். முகம்மது ஜபருல்லாகான் செய்த பிரசங்கத்தின் முடிவுரை).**

---

மனித சமூகத்தின் சரித்திரத்திலேயே இது ஒரு முக்கியமான சந்தர்ப்பமாகும். இச்சந்தர்ப்பத்தின் அடிப்படையான தத்துவத்தை நான் உங்களுக்கு எடுத்துக் கூற கடமைப்பட்டுள்ளவனுயிருக்கிறேன். எனக் கெதிரில் அமர்ந்திருக்கும் கனம் தங்கிய அங்கத்தினர்களுக்கும் எனக்கும் இதைப்பற்றி அபிப்பிராயபேதம் ஒன்றும் இல்லை என்று நான உறுதியாக நினைக்கிறேன்.

மனிதர்களுடைய துன்பத்தை நீக்கவும், சமூகத்திற்குச் சுகத்தையளித்து இன்பவாழ்க்கையை வளர்க்கவும் அவசியமான சாதனங்கள் இந்த இருபதாம் நூற்ருண்டில், மனிதனுக்கு ஏராளமாகக் கிடைத்திருக்கின்றன. அப்படிக் கிடைத்திருந்தபோதிலும், இந்த சமூக வாழ்க்கையை ஆக்குவதற்கு உபயோகப்படுத்துவதற்குப் பதிலாக, இந்த சாதனங்கள் சமூகத்தையே அழிப்பதற்கு உபயோகப் படுத்தப்படுகின்றன.

இப்படித் தலைகீழாய் விட்டதற்கு காரணம் என்ன?

நம்முடைய ஹிருதயங்களிலிருந்து தெய்வத்தைத் துரத்தி விட்டோம். தெய்வ உணர்ச்சி மறைந்தது. ஆசையும், பொருமையும், ஆணவமும், கர்வமும், துர் எண்ணங்களும், சுயநலவெறியும் நம் மனங்களில் தேவதைகளாகப் புகுந்து கொண்டன. இதனுல்தான நாம் இந்த துயரநிலையை அடைந்தோமென்பது என் நம்பிக்கை. கடவுளின் கண் முனனேயே அக்கிரமங்கள் அமோகமாக நடக்கவாரம்பித்துக் கடவுளுக்கே பொறுக்க முடியாமல் போய்விட்டது. அழிவேயில்லாத இந்த அழிவிலிருநதும், அத்து மீறிப்போகும் அக்கிரமங்களிலிருந்தும் எந்த விதமாக மனிதன் விடுபட்டு, சமாதானமும் சகோதரத்வமும் நிறைந்த பாதை வழியே செல்லுவான்? இந்த மீட்சிக்கு ஒரே ஒரு வழிதான் உள்ளது.

அதாவது, நம்முடைய மனதில் ஆட்சி புரியும் அக்கிரம எண்ணங்களை அகற்றி மாசு நீங்கத் துடைக்கவேண்டும். நம் இருதயத்தில் குடிபுகுந்துள்ள கொடிய தேவதைகளை விரட்டிவிட்டு, தூய்மையை நிறப்பி, ஆதிமுதலாகிய அத்தனிக்கடவுள் வந்தமரும் அரியாசனமாக நம்மனதைச் செய்யவேண்டும். ஆயுதங்களோ, யுத்த தளவாடங்களோ, உணவுப் பொருள்களோ இதைச் செய்யமுடியாது.

ஆயுதங்களின் உதவியால் பகைவரைத் துரத்திவிட்டு மனித சமூகத்தின் தேகபலம் அழிவதைத் தடுத்துக் காப்பாற்றலாம். ஆனாலும் தேகபலத்தோடு மனோபலத்தையும் ஆத்ம உணர்ச்சியையும் காப்பாற்றவேண்டும். பகைவனை விரட்டிவிடுவது மட்டும் சமூகத்தைக் காப்பாற்றிவிடாது. காக்கையைத் துறத்தி விட்டால் மட்டும் பாத்திரம் எச்சல் நீங்கி பரிசுத்தமாகிவிடாது. சத்துருவை அடக்கினவுடன், அவனையும் அவனால் வருந்தினவர்களையும், பாதுகாப்பு நிறைந்ததும், க்ஷேமகரமானதுமான ஒரு இடத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டும். அந்த இடம், அந்தச் சமூகம் உயர்ந்த நெறியிலமைந்து ஆத்மாவை வளர்ப்பதாக இருக்கும் இடமாதல்வேண்டும். இக்காரியத்தை செவ்வனே முடிக்க நாம் கடவுளுடைய ஆக்ஞைக்குட்பட்டுப் பணிந்து வேலை செய்ய வேண்டும். மனிதன் தெய்வாம்சமாகச் சிருஷ்டிக்கப் பட்டுள்ளான். அவனைத் தெய்வப் பணிக்காகவே சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்தக் காலத்தில் தெய்வாம்சத்தையும் தெய்வப் பணியையும் காணமுடியுமோவென்றுதான் நான அஞ்சுகிறேன். ஆயினும் இந்தப் புனிதமான பணி கட்டாயம் செய்து முடிக்கப் படுமென்றே நான் நம்புகிறேன். அப்பணி இன்னதென்று நாம் முதலில் சரியாக அறிந்துகொண்ட பினனர் நம்முடைய முழுச் சக்தியையும் பிரயோகித்து அப்பணியைச் செய்துமுடிக்கவேண்டும். இப்பணியின் தன்மையை அறிவதற்கு, உண்மையான, உருக்கம் நிறைந்த, மனமும் மெய்யும் ஈடுபட்ட பிரார்த்தனை ஒன்றுதான் சரியான வழி. பண்டைக் காலத்தில் கடவுள் அடியவர்களின் பிரார்த்தனைகளுக்குச் செவி சாய்த்ததுபோல் இக்காலத்திலும் காது கொடுத்துக் கேட்பார். சந்தேகமில்லை. அந்தக் காலத்தில் பக்தர்களுடன் பேசிய கடவுள் இந்தக் காலத்திலும் பேசுகிறார். நாம் மட்டும் கவனமாகக் காது கொடுத்தும், மனம் ஊன்றியும் அவருடைய வார்த்தைகளைக் கேட்டால்! "என்னையடைய முயல்பவர்களுக்கு நான், என்னையடையும் வழியைக் கட்டாயம் காண்பிப்பேன்" என்று பகவான் உறுதி கூறுகிறார். "நான் உபதேசிக்கும் போதெல்லாம் என் உபதேசத்தைக் கடைப்பிடிப்பவனுக்குப் பயமுமில்லை துயரமுமில்லை." "ஏ தீர்க்கதரிசியே, (முகம்மது) என்னடியார்கள் உன்னிடம் என்னைப் பற்றிக் கேட்பார்களானால் நான் அருகிலேயே இருக்கிறேன். என்னை நோக்கிக் கூப்பிடுபவனின் குரலுக்கு நான் பதில் அளிக்கிறேன். அவர்கள் தங்களுடைய மனங்களை எனக்குத் திறந்து காட்டட்டும். என்னை நம்பட்டும். அப்படி நம்பினால் அவர்களுக்குச் சரியான பாதை புலப்படும்." "நானும் என் தூதர்களும் அழிவற்றவர்கள்."

கனவான்களே, இதோடு நான் முடித்துக்கொள்ளுகிறேன். எதிரே அமர்ந்திருக்கும் அங்கத்தினர் என்னுடன் ஒத்துழைக்கின் அவர்களுக்கும் இந்தியாவுக்கும்

நன்மை ஏற்படும். என்னுடைய கொள்கைக்கு அவர்கள் மாறுபடின், நான் அப்பொழுது அவர்களுக்குச் சொல்லுவது: "நீங்கள் செய்யும் நன்மை உங்களுக்கே; நீங்கள் செய்யும் தீமையும் உங்களுக்கே." "என் நடத்தைக்கு நான் பொறுப்பாளி. உன் நடத்தைக்கு நீ பொறுப்பாளி." "என்னுடைய கடைசி வார்த்தையானது, அண்டசராசரங்களின் ரக்ஷகனை அல்லாவிற்கே எல்லாப் புகழும் பெயரும் உரியன என்பதே."

---

## இதாலியின்மேல் ஜெர்மனி படையெடுக்கும் கட்டாயம் ஏற்படுமா?

## யுத்தத்தின் முற்போக்கைப்பற்றி ஆசிரியர் பெனஷ்.

## 1942 இளவேனிலில் நாஸிகளின் வீழ்ச்சி?

## இந்தியாவிற்கு ஜெக் தலைவரின் செய்தி.

[டி. ஏ. ராமன் எழுதியது].

"இதாலியின் மேல் ஜெர்மன் படையெடுப்பு என்பது நடக்கக்கூடியதே. கட்டாயம் அனுபவத்தில் நடக்கக் கூடியதே." என்று தன்னுடைய அபிப்பிராயத்தை ஆசிரியர் எட்வர்ட் பெனஷ் நான் அவரைப் பேட்டி கண்டபோது கூறினார்.

"கிரீஸிலிருந்து கிடைத்த செய்திகள் என் மனதிற்குகந்த வியப்பை அளித்தன. இந்தப் படையெடுப்பு முஸோலினியின் தவறுகளில் ஒன்று என்று நான் முன்னமேயே உணர்ந்திருப்பினும், இது இவ்வளவு மகத்தான தவருக முடியும் என்பதை நான் தீர்மானமாகக் கருதியிருக்கவில்லை.

"எல்லா சர்வாதிகாரிகளுமே எப்போதாவது இம்மாதிரி வழுக்கிவிழுவது நிச்சயமே. தன்னுடைய ஆதிக்கமும் அதிகாரமும் க்ஷீணித்துப் போகும்படியான தவறை முஸோலினி செய்துவிட்டான் என்பதை நாம் நன்கு அறிகிறோம்.

"எப்படியிருந்தாலும் இதாலியின் மேல் ஜெர்மனி படையெடுக்கக் கூடுமென்பதை நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். பாஸிஸ் ஆதிக்கம் தளர்ந்துபோய் கிடுகிடென்று ஆடிக் கீழே விழப்போகும் சமயத்தில், தன்னுடைய பதவியைப் பாதுகாத்துக் கொள்வதற்காக ஹிட்லர் இதாலியின் மேல் பாயக்கூடும்."

யுத்தம் இன்னும் எவ்வளவு காலம் நடைபெறலாம் என்று நான் கேட்டதற்கு டாக்டர் பெனஷ் கூறிய தீர்மானமான பதிலாவது:—

"1942 இளவேனிலில் ஜெர்மனி வீழ்ச்சியடையும். நேசதேச யுத்த முயற்சியானது அடுத்த கோடையில் வெற்றிச்சிகரத்தையடையும். அமெரிக்கரின் ஆதரவும் இதற்கு முக்கிய காரணமாக ஏற்படும்."

### க்ஷீணதசையின் ஆரம்பம்.

"1941-ஆம் வருஷம் முழுவதும், பொருளாதார முற்றுகை முறைகளும், ஆகாய விமானத் தாக்குதல்களும் கலந்து செய்துள்ள முயற்சியால் ஜெர்மனியின் மூலப் பொருள்களெல்லாம் காலியாகி, மிகவும் உச்சத்திலிருந்த அவர்களுடைய மனோவலிமையைத் தகர்த்து விடும். ஜெர்மனியால் இப்பொழுது ஆதிக்கம் செலுத்தப்பட்டு வரும் பிரான்ஸும், பிறநாடுகளும் கொஞ்சங்கொஞ்சமாக எதிர்த்துக் கொண்டே வரும். கட்டாயம் க்ஷீணதசை ஏற்பட்டு 1942 இளவேனிலில் முடிவான வீழ்ச்சி ஏற்படுவதை நாம் எதிர்பார்க்கலாம்."

ஜனநாயகக் கொள்கையின் பிரசாரகராகவும், தீர்க்கதரிசியாகவும் உலகம் டாக்டர் பெனஷைப் போற்றுவதால், பொதுஜன ஆட்சியைப்பற்றிய அவருடைய கொள்கையைத் திரும்பியும் ஒரு முறை கூறமுடியுமா என்று கேட்டேன்.

"முடியும்" என்று அழுத்தமாகப் பதிலளித்தார் அவர். "எல்லா முன்னேற்றங்களுக்கும் ஜனநாயக முறை அத்தியாவசியமானது என்பதை நான் இப்பொழுது அதிகமான உறுதியுடன் நம்புகிறேன். முடிவில் அதுவே வெற்றியடையுமென்பது நிச்சயம். வாழ்க்கையின் எல்லாவித வீரியத் துறைகளுக்கும் திறவுகோல் ஜனநாயகம்தான் என்பதை இந்த யுத்தம் நிரூபித்துக் காட்டிவிட்டது.

"இதே காரணத்தினுல்தான் நாஸிகள் முதலில் ஜனநாயகக் கொள்கையையே தாக்கவாரம்பித்தார்கள். ஏனென்ருல் தன் இலக்ஷியங்கள் சித்தியடைவதற்கு ஹிட்லர் ஜனநாயகத்தின் பிரேதத்தைக் கடந்துசென்ருல்தான் முடியும்!

"ஜனநாயகம் இன்னும் பரிபூரண பக்குவம் அடையவில்லை என்பது உண்மைதான். பொருளாதார பிரச்னைகளைத் தீர்த்துவைக்க ஜனநாயகத்திற்குப் போதுமான சக்தியில்லையென்பது சமீபத்தில் நேர்ந்துள்ள பொருளாதார நெருக்கடிகளால் நன்கு விளங்குகிறது. ஜனநாயக அமைப்பில் அதிகார வகிப்பைப்பற்றியும் தலைமை வகிப்பைப் பற்றியும் எழும் பிரச்னைகளைத்தீர்ப்பது எவ்வளவு கடினம் என்பதை, யுத்தத்தில் வந்து முடிந்த இந்த அரசியல் நெருக்கடியே காட்டிவிட்டது.

"இந்தக் குறைகளையெல்லாம் பிரசாரத்தின் மூலம் ஹிட்லர் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டான். யுத்தத்திற்குப் பிறகு இந்தக் குறைகளெல்லாம் நிவர்த்திக்கப்படவேண்டுமென்பதில் சந்தேகமில்லை.

"ஜனநாயகத்தின் குறைகளை நிவர்த்திக்க உண்மையான ஜனநாயகம் அதிகமாவதே சரியான வழி என்று மாஸாரிக் கூறியதை நான் முழுமையும் நம்புகிறேன்."

'அமர்க்களத்தில் தோல்வியடையும் முன் பிரான்ஸ் அரசியல் களத்தில் தோல்வியடைந்தது' என்று நான் கூறினேன்.

"பிரான்ஸின் வீழ்ச்சியிலிருந்து பொதுவான முடிவுகளைத் தயாரிக்க இன்னும் காலம் வரவில்லை. பிரான்ஸின் வீழ்ச்சிக்குக் காரணம் ஜனநாயகம் என்று குற்றம் சாட்டமுடியாது. ஏனென்ருல் பிரஞ்சு ஜனநாயக முறை அமைப்பில் குறைபாடுகள் உள்ளன. முக்கியமாக நெருக்கடி சமயஙகளில் ஒழுங்காக நடந்துகொள்ளவியலாமலும் ஒரு கட்டுப்பாட்டுக் கடங்கியிராமலும் உள்ளது பிரான்ஸ்.

"ஆனுல் இங்கிலாந்தைப் பார்க்கும் போது இந்தக் குறைபாடுகள் எல்லா ஜனநாயக முறைகளுக்கும் பொதுவான தல்லவென்றும் பிரான்ஸ் விஷயத்தில் மட்டும் நிர்வாகக் குறைவின் விளைவே இதுவென்றும் உணர்கிருேம்."

## புதிய ஏற்பாடு—ஒரு செப்பிடுவித்தை.

இந்தப் புதிய ஏற்பாட்டைப்பற்றி அச்சுநாடுகள் செய்யும் பிரசாரத்தைப் பற்றி அவர் என்ன நினைக்கிருரென்று பெனஷைக் கேட்டேன். "நினைப்பதற்கு ஏதாவது இருந்தால்தானே. இதெல்லாம் ஜெர்மனியின் உண்மை

யான நோக்கங்களைத் திரை போட்டு மறைக்கச் செய்யும், கண்ணைத் துடைக்கும், திடுக்கிடும் சம்பவங்கள்தான் இவை. ஹிட்லரைத் தன் போக்காக விட்டால், ஜெர்மானியருக்கு ஐரோப்பாவையே அடிமைப்படுத்தி அதை அஸ்திவாரமாக வைத்து அதன்மேல் தன் புதிய ஏற்பாட்டை அமைப்பான்.

"ஒரு சாராரை மற்றொரு சாரார் அடக்கி அதன் மூலமாய் உலக சாம்ராஜ்யத்தையோ ஐரோப்பிய ஏற்பாட்டையோ அமைப்பது கஷ்டம். நிலங்களைப்பற்றிய வரையிலும், ஜனங்களைப் பற்றிய வரையிலும் ஜனநாயக சமரஸத்வத்தை ஸ்தாபித்து முக்கியமாக ஒவ்வொரு தேசத்திலும் ஜனநாயக சமத்வத்தை ஏற்படுத்தி அதன் அஸ்திவாரத்தின்மேல் தான் ஐரோப்பாவைச் சீர்திருத்தவேண்டும்.

"இவ்வளவு சீர்திருத்தங்களெல்லாம் செய்யப்படவேண்டியிருப்பதால் ஹிட்லரையும் முஸோலினியையும் சண்டையில் ஜயித்தால்மட்டும் முடியாது.

"சர்வாதிகாரிகளின் ஆதிக்கத்துக்கு முக்கிய தூண்களாக உள்ள தனி மனிதன் அதிகாரம், கட்சிகளின் ஆர்ப்பாட்டம், ஜாதிபேதத் தடபுடல் முதலியவைகளை அறவே ஒழிக்கச் சாதகமான நிலைமைகளை ஜெர்மனியிலும், இதாலியிலும் ஏற்படுத்தவேண்டும். தங்களுடைய தேகபலம் மட்டுமல்ல, நீதி வலியாலும் முறிக்கப்பட்டது என்று ஜெர்மானியரும், இதாலியரும் உணரவேண்டும்.

## ஜெக்கர்களின் எதிர்ப்பு.

"ஜெக்கோஸ்லோவோகியாவின் தற்கால நிலைமையைப்பற்றியும், அது பொது நன்மைக்காக உழைத்திருப்பதையும்பற்றிக் கூறுகையில், எவ்விதச் சித்திரவதைக்காளாகினும், கடைசி வரையில் ஜெக்கோஸ்லோவோக்கியர்கள் ஜெர்மனியின் ஆக்கிரமிப்பை எதிர்த்தே தீருவார்கள்" என்று தலைவர் கூறினர்.

இன்னும் அவர் கூறுகையில் "நமது நாட்டிலிருந்து கிடைத்திருக்கும் செய்திகள் நமது நம்பிக்கையை ஊர்ஜிதப்படுத்துகின்றன. இவ்வளவு கஷ்டதசையிலும் நமது ஜனங்கள் மனவலிமையோடு ஓங்கி நிற்பது எனக்கு மகிழ்ச்சியளிக்கிறது. அவர்களுடைய வீரத்திற்கும், மானத்திற்கும் இழுக்கு ஏற்படாமல், அவர்களுடைய பிரசாரகர்களாகிய நாம் நடந்துகொள்ளவேண்டியதென்பதைத் தவிர நான் வேறு ஒன்றும் வேண்டிக்கொள்ள வில்லை. அவர்களைக்குறித்து நான் மிகவும் பெருமையடைகிறேன்.

"இந்தப் போராட்டத்திற்கு ஜெக்கோஸ்லோவோகியா அளித்திருக்கும் வீரியபலம் எதுவென்றால் உள்நாட்டு எதிர்ப்பே. இந்த எதிர்ப்பைச் சமாளிப்பதற்காகவே 40 லக்ஷம் ஜெர்மானியர், போர்வீரர், போலீஸார், உத்தியோகஸ்தர்கள் வேண்டியிருந்தது, இவர்களை வேறு உபயோகமான இடத்தில் யுத்தரங்கத்தில் போட்டிருக்கலாம்.

"ஜெர்மனியின் யுத்த முஸ்தீப்பைப் பலப்படுத்தும் ஒவ்வொரு வேலையையும், ஜெர்மன் யுத்தத் தொழிற்சாலையையும் அமைதியுடன் எதிர்க்கின்றது.

"அமைதியாய் எதிர்ப்பதைக் குற்றமாகக் கருதி அடிக்கடி சிரச்சேதங்கள் செய்வதிலிருந்தே, நாம் மறைமுகமாக நேசதேசங்களுக்கு உதவி செய்வதையும் ஜெர்மானியர் உணர்ந்துவிட்டார்களென்றறிகிறோம். நேர்முகமாக உதவி

செய்ய, நம்முடைய அளவிற் சிறிய வலிமையில் பெரிய சேனை இருக்கிறது. பிரான்ஸின் வீழ்ச்சிக்குப் பிறகு அது பிரிடனிலும், மத்திய கிழக்குப் பிரதேசத்திலும் மாற்றிக்கொண்டுவிட்டது.

"முதலில் பிரான்ஸிலும், பின்னர் பிரிடனிலும் நமது ஆகாய விமானிகள் மிகவும் வெற்றிகரமாக யுத்தத்தில் ஈடுபட்டார்கள். பிரிடனுக்கும், ஜெக்கோஸ்லோவோக்கிய தற்காலிகமான அரசாங்கத்திற்கும் ஏற்பட்ட சமீப ஒப்பந்தத்தின்படி நமது சேனையின் பதவியானது நிர்ணயிக்கப்பட்டு, நேசதேச அமைப்பில் நமது சேனைக்கு முழுச் சுதந்திர உத்தரவாதம் தந்தது.

இந்தியாவுக்கு வாழ்த்து.

"இனி நான் உங்களைக் கேள்விகள் கேட்கவேண்டியது முறை" என்று பெனவ்ஷ் கூறி இந்தியாவின் பொது நிலைமையைப் பற்றியும், யுத்த முயற்சிகளைப்பற்றியும் வெகுவாக விசாரித்தார். இந்தியாவின் நிலைமையை நான் வெகு பரிவுடன் பல வருடங்களாகக் கவனித்துக்கொண்டு வந்திருக்கிறேன். தொடர்ச்சியான முயற்சியுடனும், பிரிடனுடன் பரஸ்பர நேச மனப்பான்மையாலும் அது (இந்தியா) தன்னுடைய தேசிய லக்ஷியங்களை எய்தவேண்டுமென்பதே என் மனமார்ந்த நம்பிக்கை.

"பிரசித்திபெற்ற உங்கள் தேசத்திற்கு என்னுடைய அன்பார்ந்த ஆசிகளை நீங்கள் அறிவித்தால் நான் மிகவும் நன்றியறிதலுள்ளவனாக இருப்பேன்".

---

## நம்பத்தகாத கிரேக்கர் படை.
## யுத்தத்தில் வளரும் வீரர்கள்.
## பின் (Finland) தேச சிப்பாய்களுடன் உவமானம்.

அல்பேனியாவிலிருந்து கிடைத்த அடியிற்கண்ட தந்தியை டெய்லி டெலக்ராப் பத்திரிகை பிரசுரம் செய்கிறது.

கார்ப்யூவிலிருந்து துடங்கி வடக்கே ஒக்ரீடா ஏரிவரை சுமார் 250 மைல்கள் நாங்கள் இடைவிடாது ஒவ்வொரு போர்க்களத்திற்கும் சென்றிருக்கிறோம். சில தூரம் மோட்டார்களிலும், சில தூரம் குதிரையின்பேரிலும், ஏகதேசம் சேர்ப்பாங்கான பிரதேசங்களில் நடையிலும் மேற்படி பிரயாணத்தைச் செய்தோம்.

மேற்கண்ட பிரதேசமும் மிகவும் மலைப்பாங்கான காடாரம்ப பூமி. இப்பேற்கொத்த அல்பேனியா யுத்தப்பிரதேசத்தின் ஒரு தலவிலிருந்து மற்றொரு தலவுவரை யாத்திரை செய்தவர்கள் எட்மண்ட் ஸ்டீவன்ஸ் என்பவரும் நானும்தான்.

கிரேக்கர் ஸைன்யங்களை நாங்கள் பல நிலைமைகளில் பார்த்திருக்கிறோம்; இடைவிடாமல் ஜயித்துக்கொண்டும், முன்னேறிக்கொண்டுபோகும் காக்ஷியையும் கண்டிருக்கிறோம். ஆனதுபற்றித்தான் நம்பத்தகாத கிரேக்கர் படையின் குணதிசயங்களைப்பற்றித் துலக்கி எழுத எங்களுக்கு ஸாத்யமாக இருக்கிறது.

கிரேக்க சிப்பாய்களின் வெளித்தோற்றமானது முற்றிலும் அவர்களுடைய குணாதிசயங்களைத் துலக்கக் கூடியதல்ல; அவர்கள் சிறிய ஆஹ்ருதி உள்ளவர்கள். ஸராஸரி 5 அடி, 5 அங்குலத்திற்கு மேல் உயரமுள்ளவர்கள் அல்ல. விசேஷமாக அவர்கள் அணிந்திருக்கும் படை அங்கிகளும் ஒன்றிரண்டு மடங்கு அளவிற்கு மிஞ்சினதாய்த் தளர்ச்சியாகத்தோன்றும்.

ஸ்தூலப் பார்வைக்கு ஏதோ தற்செயலாய் நேர்ந்தபடி கூட்டப்பட்ட படை ஆட்கள்போல் அவர்கள் தோன்றுகிறார்கள். உற்சாகமாய் குதூகலத்துடன் அவர்கள் கூக்குரலிட்டு அலர்வதைக்கேட்டால், ஏதாவது ஒக்குமத்துடன் தீவிர முயற்சி செய்ய அவர்களுக்கு இயலுமோ என்பதிலேயே சந்தேகம் ஏற்படும்.

ஆனால் அவர்கள் செய்யும் காரியங்களை நோக்கினால், எவ்வளவு ஸாமர்த்யம் வாய்ந்தவர்கள் என்று சீக்கிரம் புலப்படும். பார்வைக்கு அலங்கோலமுள்ளவர்களாயிருந்தாலும், யாதொரு ப்ரதிபந்தத்தையும் பொருட்படுத்தாமல், அதிசீக்கிரமாக கார்யஸித்தி பெறக்கூடியவர்கள் என்று நன்கு விளங்கும். (Finland) பின் தேசத்து சிப்பாய்களோ, கிரேக்கர்களைக்காட்டிலும் மிகவும் கம்பீரமான நடை, உடை, தோற்றம் உள்ளவர்கள். இருந்தபோதிலும் அவர்களுக்குள்ள ஸாமர்த்யமும், அதிசயமான ஊக்கமும், தளராத தேக வலிமையும், வெற்றியில் உறுதியும் கிரேக்கர்களுக்கும் உண்டு. பின் (Finland) தேசத்து சிப்பாய்க்கு நிகராக வேறு யாரையும் காண இயலாதென்று நான் நினைத்திருந்தது உண்டு. ஆனால் அந்த நினைப்பு மாறிவிட்டது. பின் தேச சைன்யத்திற்கு உவமையாக கிரேக்கர்களைத்தான் கண்டேன்.

போரில் சேர்ந்து தேகவன்மை குறையாமல், போரிலும், அதில் ஏற்படும் கொடுமைகளிலும், விருத்தியாவோர், இக்குள்ளமான உத்ஸாகத்தினால் பொங்கும் கிரேக்கர்களைப்போல் மற்றொருவர் எவரையும் நான் பார்த்ததில்லை. நமக்குத் தெரிந்தவரை அவர்களைப்போல் சுறுசுறுப்பாயும், களிப்புடனும் சண்டை செய்வோர் யாரும் இல்லை. நாங்கள் சென்ற இடமெல்லாம் சேறுமண்டின, சிறிப்பு வாய்ந்த சிறியகிரேக்கர்களைச் சந்தித்தோம்.

ஒரு இரவு முழுவதும், தூக்கமில்லாமல் மலை மடுவுகளைக் கடந்துசென்றும், இளைக்காமல், களைக்காமல், குதூஹலமாகவே நடந்து செல்வார்கள். மேலும் வழியில் போகும் ஜனங்களுடன் விளையாடிக்கொண்டே போவார்கள். மலை, மழை, கவனியாது ஓயாமல் சிறுகச்சிறுகச்சென்று கொண்டே, போகிற மார்க்கமெல்லாம், "இதாலியர்களைப் பிடித்தால், அவர்களை அப்படியும், இப்படியும், ஆட்டி வைப்போம்" என்று ஆரவாரம் பண்ணிக்கொண்டு போவார்கள். மற்றவர்களைப்போல் நடித்து ஜாடைசெய்வதில் அவர்கள் மிக்க ஸாமர்த்தியர்கள்; ஆனால் அவ்விதம் கேலி செய்வதிலும், நற்குணமான இனிமையுடன் நடிப்பார்கள்.

நிச்சயமாக உலகிலுள்ள ஸைன்யங்களில், கிரேக்கப் படைதான் மிக்க ஊக்கமும் திறமையும் வாய்ந்தது. எந்தவிதமான இடையூறுகளாக இருந்தால் என்ன, மலை மடுவாய் இருந்தால் என்ன, மார்க்கத்தின் கொடுமையும், காலத்தின்

நேர்மையும் எவ்விதம் இருந்தாலும் சரி, ஒன்றையும் லக்ஷியம் செய்யாமல் ஜயமே குறி என்று பிரதிதினமும் முன்னேறியே செல்வார்கள்.

இரும்புபோல் தசை நரம்புகளுடன், போரில் பேரன்புள்ளவர்கள் இப்பணி வுள்ள, கிரீஸ் நாட்டு மக்கள். அவர்களுடைய மனோ தைர்யமும், ஸ்வேச்சையின் பெருக்கும் சந்திப்போர் உள்ளத்தை ஒருங்கே கவருகின்றன.

கிரேக்க படைத்தலைவர்கள் தங்கள் ஸைன்யங்களைப்பற்றி சிலாகித்துப் பெருமை பாராட்டுவதின் காரணம் என்னவென்பது இப்பொழுதுதான் நன்கு விளங்குகிறது.

நாங்கள் ஒக்ரீடா ஏரியை நோக்கிப் போய்க்கொண்டிருக்கையில், மழையிலும் தாங்க முடியாத குளிரிலும் அலக்ஷியமாகச் சென்று கொண்டிருந்த கிரேக்கப்படை வகுப்பைக் கடந்து சென்றோம். அப்படைத் தலைவரை விசாரித்தோம். முதல் நாள் ஸாயங்காலம் ஆறுமணிக்கு அப்படை பயணம் புறப்பட்டதாம்; இரா முழுதும் தங்காமலே, ஓய்வில்லாமலே, நடந்துகொண்டே போகிறார்கள். இவ்விதம் மறுநாட்காலை ஐந்து மணிவரை மழையிலும், பனியிலும் பிரயாணம் செய்திருக்கிறார்கள். இந்தப் பதினொன்று மணி அளவில் இப்படை முப்பது மையில் தூரம் நடந்திருக்கிறார்கள்.

---

## அமெரிக்கா உற்பத்தி-யுத்த உற்பத்தியாக மாறுகிறது.
## ஜாஸ்தி முயற்சி வேண்டும்.
## பிரிடனுக்கு உதவி நீடிப்பு.
## பண பிரச்னை ஒரு முட்டுக்கட்டையல்ல.

---

லண்டன் 'டைம்ஸ்' பத்திரிகையின் நியூயார்க் நிருபர் தந்திமூலம் அறிவிப்பதாவது:—

மற்ற தேசங்கள் திடீரென்று பிரம்மாண்டமான அளவுக்கு யுத்த முஸ்தீப்புகளைச் செய்யவேண்டி வந்த நிலைமையை ஐக்கிய அமெரிக்கா அடைந்திருக்கிறது. அது என்னவென்றால்:—சமாதானத் தொழில் முறைகளுக்காக உபயோகிக்கப் பட்டு வந்த சாதனங்களை முற்றிலும் மாறின யுத்த கார்யங்களுக்காக உபயோகிப் பதுடன், அவசர அவசரமாகப் பிரம்மாண்டமான புதிய சாதனங்களையும் ஏற்படுத்துவது.

இம்மாதிரி தொழில்காரரின் நோக்கமும், தன்மையும் திடீரென்று மாறு வதில் சில கஷ்டங்கள் உடந்தையாகவரும்; என்னென்ன செய்யவேண்டியது அவசியம், எப்படிச் செய்வது என்பதைப்பற்றி பலத்த அபிப்பிராயபேதங்களும் எழுந்திருக்கின்றன. நல்ல வேளையாக இவைகள் பரிகரிக்கமுடியாதனவல்ல.

இருந்தபோதிலும் தொழில் ஸ்தாபனங்கள் அரசாங்க திட்டங்களைப்பற்றி முறையிடுகின்றன. தொழில் ஸ்தாபனங்கள் அரசாங்கத்துடன் நன்முக ஒத்துழைக்கின்றன. அரசாங்கமும் முன்பின் காட்டாத புத்திசாலித்தனத்தையும் இணக்கத்தையும் காட்டி வருகிறது. உள்நாட்டு தற்காப்பு என்ன, பிரிடனுக்கு யுத்த தளவாடங்கள் செய்து அளிப்பது என்ன, இவ்விரு விஷயங்களிலும் முன்னேற்றம் அபாரம்.

இம்முயற்சி பெரிதாகவும் ஆச்சர்யமாகக்கூட இருந்தபோதிலும், ஜெர்மானியர்கள் அவர்களுடைய ஊக்கத்தை பிரிடிஷ் உற்பத்தி கப்பற் போக்குவரத்து இவற்றில் செலுத்தியிராவிட்டால், இது ஒருகால் போந்து இருக்கும். ஆனல் இப்பொழுது மேற்கண்ட காரணத்தால் அது போதவில்லை. ஆனதால் தற்போதைய அமெரிக்கா பிரச்னை இதுதான்—அந்நாடு சட்டப்படி யுத்தத்தில் இறங்கவில்லை; அது யுத்தத்தில் இறங்கியிருக்கும் உணர்ச்சியையும் ஊக்கத்தையும் உண்டுபண்ணி ஆயுதங்கள் என்ன, இதர தளவாடங்கள் என்ன, இவற்றை எவ்வளவு ஜாஸ்தியாக செய்யமுடியுமோ அவற்றை அவசியம் செய்தாகவேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது, என்பது.

இதற்குப் பதிலளிக்க ஜெர்மானியர்களுக்குச் சிரத்தையில்லை; இருந்தபோதிலும், அதிர்ஷ்டவசமாக அவர்களே இதைத் தீர்த்துவிட்டார்கள். இங்கிலாந்து உள்நாட்டிலுள்ள நகரங்களைக் காரணமின்றி கொடுமையுடன் நாஸிகள் சென்ற இரண்டு வாரத்துக்குள் தாக்கி அழித்தால், சர்வாதிகார நாடுகளால் உலகினிற்கே ஏற்படக்கூடிய அபாயத்தை, மாத கணக்காக அமெரிக்காவில் இதைப்பற்றி விவாதித்து எடுத்துக்காட்டுவதைவிட, எடுத்துக் காட்டிவிட்டார்கள். அமெரிக்கர்கள் முன்பும் சரி, தற்பொழுதும் சரி, நேரடியாக யுத்தத்தில் சிக்கிக்கொள்ள இஷ்டப்படவில்லை. ஆனல் பிரிடனுக்குச் சாமான் உதவுவதால் தங்களை யுத்தத்தில் இழுத்துவிடுமோ என்ற பீதி அவர்கள் போக்கை மாற்றப்போவதில்லை. சிலர் சொல்லுகிறபடி, அமெரிக்கா யுத்தத்தில் இறங்காமலிருப்பதற்கு ஒரே ஒரு வழி அது பிரிடனுக்கு வேண்டிய யுத்தத் தேவைகளை அளிப்பதுதான், என்ற எண்ணத்தின் பேரிலோ; அல்லது தன் பந்தோபஸ்தைப் பயமுறுத்துகிறவர்களைப்பற்றிய இழிவாலேயோ; பிரிடனுக்கு எது எது வேண்டுமோ அவைகளை உற்பத்தி செய்து கொடுக்க அமெரிக்கா தீவிரமாகக் கங்கணங்கட்டிக்கொண்டு இருக்கிறது.

யுத்தம் நீடித்து நடந்தால், அமெரிக்காவில் வாங்கும் சாமான்களுக்கு பிரிடன் எவ்வாறு கிரயங்கொடுக்கப்போகிறது என்பதற்கு இப்பொழுது பதில் சொல்லவேண்டாம். இதை வாஷிங்டனில் இருக்கும் அமெரிக்கா கவர்ன்மெண்டு கவனித்துக்கொள்ளும். ஒன்று மட்டில் முடிவாகச் சொல்லலாம்—ஏற்பாடுகள் எவ்வாறு முடிந்தாலும் சரி, அமெரிக்காவிலிருந்து இனி சாமான்கள் சப்ளையைப்பற்றி பிரிடன் கவலைப்படவேண்டாம்.

# ஜெர்மன்-இதாலிய ஒலிபரப்புப் பொய்கள்.

## A—ஆங்கிலத்தில் ஒலிபரப்பு.

### அவர்களுக்கு நாம் படையெடுத்தால் கோபம் வருகிறது.

மேற்குப் பாலைவனத்தில் டிஸம்பர் 9-ல் பிரமாதமான படையெடுப்பை பிரிடன் துவக்கிவிட்டது. அதற்கு மறுநாள் மாலை 5.30 மணிக்கு, ஜெர்மனி ஒன்றும் தெரியாதது போல், இந்தப் பூனையும் இந்தப் பாலைக்குடிக்குமா வென்று மேற்குப் பாலைவனத்தைப்பற்றிப் பேசும்போது லிபியா எல்லையிலிருந்து ஸிடி பரானிக்கு கீல் (அஸ்பால்ட்)-ரோடுபோட்டு முடிவானதுதான் இதாலியிலிருந்து கிடைத்த சமாசாரமாகச் சொல்லிற்று. இந்தப் பாதையால் இதாலிய சைனின்யங்களுக்கு ஸப்ளைகள் தடையில்லாமல் வந்து, இனி நடக்கவேண்டிய யுத்தத்துக்கு அநுகூலமேற்படுமென்றும் ஜெர்மன் ரேடியோ முழக்கிற்று. மேற்சொன்ன ஸப்ளை சாமான்கள் எல்லாம் இப்பொழுது பிரிடன் கையில் சிக்கிக்கொண்டன. இதாலியர்கள் முன்னேறுவதற்கு பதிலாக பின்வாங்குகிறார்கள். புது ரஸ்தா ஏற்பட்டும் சுலபமாக பின்னோடக்கூட இது பிரயோஜனப்படவில்லை. ஏனென்றால் பிரிடிஷ் விமானங்களும், யுத்தக் கப்பல்களும் இடைவிடாமல் இந்த ரஸ்தாவின் மேல் குண்டுகளை வீசிக்கொண்டிருக்கின்றன.

மேற்சொன்ன ஒலிபரப்பு வெளிப்பட்டதற்கு இரண்டுமணி கழித்து '4 பிரிடிஷ் விமானங்கள் வடஆபிரிக்காவில் சுட்டுத்தள்ளப்பட்டன' என்று சொன்னதைத் தவிர பிரிடிஷ் வெற்றியைப்பற்றிப் பிரஸ்தாபமே செய்யவில்லை.

இதாலியானது தன் தோல்வியை மறைத்ததினால் ஜெர்மனியும் இந்தச் செய்தியை மறைப்பதே உசிதமென்று மறைத்துவிட்டது. இதற்கு இரண்டொருநாள் கழித்து பிரிடனுக்கு அதிக நஷ்டமேற்பட்டிருக்கிறது, இதாலிக்கு அதற்குமதிக நஷ்டமேற்பட்டிருக்கிறதென்று சொல்லிக்கொண்டது.

### பிரிடிஷ் கப்பற்படை அங்குதானிருக்கிறது.

இதாலியானது யுத்தத்திலிறங்கிய தேதி, அதாவது ஜூன் 9-லிருந்து டிஸம்பர் 10 வரையில் இதாலியால் பிரிடிஷ் கப்பற்படைக்கு நேர்ந்த சேதத்தை உத்தியோக பூர்வமாகக் கணக்கிட்டிருப்பதாக இதாலி ரேடியோ கொடுக்கும் தொகையாவது :—

| | பழுது பட்டது. | முழுகடிக்கப் பட்டது. |
|---|---|---|
| பெரிய யுத்தக்கப்பல்கள் ... ... | 7 | ...... |
| குருஸர்கள் ... ... | 29 | 4 |
| டார்பிடோக் கப்பல்கள் ... ... | 11 | 13 |
| நீர்மூழ்கிகள் ... ... | 3 | 20 |
| விமானங்களை ஏற்றிச்செல்லும் கப்பல்கள் ... | 6 | ...... |

இதாலியக் கப்பற்படை போகக்கூடிய இடங்கள், மத்தியதரைக்கடல், செங்கடல், இஜீயன்கடல் என்ற கடல்கள்தான். இவ்விடங்களில் ஒரு பெரிய கப்பலாவது, விமானங்களை ஏற்றிச்செல்லும் கப்பலாவது பிரிடனுக்கு முழுகிப் போகவுமில்லை, பழுதாகவுமில்லை. குருஸர்களில் ஒன்று மூழ்க்கப்பட்டு, மூன்று பழுதுபட்டன.

இதாலி கொடுக்கும் கணக்குப்படி, இதாலிக்கு மூன்று பெரிய கப்பல்கள் பழுது; ஒரு குருஸரும் 10 நாசகாரியும் தான் சேதம்; என்ன அவையடக்கம்! உண்மையில் பெரிய கப்பல்களில் ஐந்தும்; நீர்மூழ்கிகளில் 29-ம் சேதமாயிருக்கின்றன.

## விநாசகாலம் வரும்போது அகம்பாவமும் வந்துவிடும்.

மேற்குப் பாலைவனத்தில் இதாலியானது முதுகுகாட்டியோடுவதை மறந்து, சந்தோஷமாக, 'மேற்குப் பாலைவனத்தில் நடக்கும் காரியங்கள் இதாலிக்குத் திருப்தியையும், கௌரவத்தையும் கொடுக்கின்றன' வென்று சொல்லிக்கொள்ளுகிறது. இதாலிய சைன்யமானது, அதற்குச் சிறிய பிரிடிஷ் படையால் துறத்தப்பட்டு சுமார் 100 மைல் பின்வாங்கி, லிபியாவின் எல்லைக்கப்பால், விறட்டப்பட்டு, 30,000 போர் வீரர்களைப் பறிகொடுத்து, மூன்று உயர்தரச் சேனாபதிகளும், மற்றிரண்டு வகுப்புத் தலைவர்களும் சரணாகதியடைந்து, கைரோவில் சிறைபட்டு, நாலுநாள் யுத்தத்தில் நான்கு பிரிடிஷ் விமானங்கள் அழிய, இதாலிய விமானங்கள் 41 அழிந்துவிட்டன.

பண்டையகாலத்து ரோம் சாம்ராஜ்ய வீரர்களைப்போல் இக்காலத்திய ரோம் வீரர்களும் சண்டை செய்வதாக டிஸம்பர் 16-ல் இதாலி ரேடியோ பெருமையாய்ச் சொல்லிக்கொள்ளுகிறது.

## சீ, சீ, இந்தப்பழம் புளிக்குமென்று சொன்ன மைடாஸ்.

சென்ற வாரத்தில் யுத்த-தளவாடங்கள் உற்பத்திச்சாலை வேலைக்காரர்களுக்கு முன்பாக ஹிட்லர் செய்த பிரஸங்கத்தை ஹா-ஹா பிரபுவும், மற்றவர்களும், ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக்கொண்டு வியாக்கியானம் செய்து ஸ்தோத்திரங்கள் பலமாய் நடக்கின்றன. யுத்த-தளவாடங்களை பிரிடன் பணம் கொடுத்து விலைக்கு வாங்க வேண்டுமென்றும்; ஆனால் ஜெர்மனியில் தொழிலாளிகள் இவைகளைச் செய்துவிடுவார்களென்றும்; ஜெர்மன் தொழிலாளர்களின் உழைப்பே ஜெர்மனிக்கு முதலும், செல்வமுமென்றும்; இத்தொழிலாளர் பலத்தை வைத்துக்கொண்டு உலகத்தையே வென்றுவிட்ப்போவதாகவும் ஹிட்லர் ஊளையிட்டார்.

ஆனால் இந்த மாதிரியாகப் பணத்திலாசையில்லையென்று சொல்லிக்கொள்ளும் ஹிட்லர், பிடித்த தேசங்களில் அகப்பட்ட பணத்தை அடித்துப் பிடித்துச் சுருட்டிக்கொண்டு போவதாயிருக்கிறது.

உதாரணமாக ஜுலை 11-ல் பிரான்ஸிலுள்ள தங்கம், வட்ட (Exchange)க் கடைகளிலிருக்கும் கையிருப்பு இவைகளை ஜெர்மனிக்குக் கொடுத்துவிடவேண்டு மென்று உத்தரவு போடப்பட்டது. நார்வேயிலும், போலந்திலும் பிடிபடுவதற்கு முன்னேயே பணங்களை அப்புறப்படுத்திவிட்டதில் ஜெர்மானியருக்கு அளவில்லாக்கோபமேற்பட்டுவிட்டது.

## பிரிடிஷ் சிங்கத்துக்குக் கண் உண்டு: பார்த்துவிடும்.

கீல் என்ற ஜெர்மன் யுத்தக்கப்பல் நிலயத்தை பிரிடிஷ் விமானங்கள் தகர்த்ததினால் ஏற்பட்ட சேதத்தை படம் பிடித்து பிரிடிஷ் விமான-இலாகா பிரசுரித்திருக்கிறதைக் கேட்டு ஜெர்மனி ஆதங்கப்படுகிறது. படங்களிலிருந்து (1) சேதமேற்பட்டது ருஜுவாகவில்லையென்றும் (2) இந்தப் படங்கள் 'சிங்கத்துக்கு இறகு முளைத்திருக்கிறது' என்ற சினிமாப்படத்திலிருந்து எடுக்கப் பட்டிருக்கிறதென்றும் (3) பிரிடிஷ் எதிர்ப்பால் பிரமாதமான பழுது ஏற்பட்டு விடவில்லையென்றும், ஜெர்மன் அறிக்கை ஏற்றுக்கொள்ளவில்லையென்றும் பலகாரணங்கள் சொல்லப்படுகின்றன.

டிஸம்பர் 13-ல், பி. பி. ஸி. விமான நிருபரான ஆலிவர் ஸ்டீவர்ட் என்பவர் இதைப்பற்றிப் பேசுமிடத்து, 'ஸ்டீரியாஸ்கோப் (Stereoscope) கண்ணாடி வழியாய் இந்தப்படத்தைப் பார்த்தால், ஏற்பட்டிருக்கும் சேதம் நன்றாய் வெளிப்படும்' என்று எடுத்துக்காட்டியிருக்கிறார். பிரிடிஷ்-விமானங்கள் படையெடுத்தபோது இந்தத் துறைமுகத்தில் 26,000டன் நிறைகொண்ட ஷார்ன் ஹார்ஸ்டும், 10,000 டன் நிறைகொண்ட ஹூயட்ஸாவும், 6,000 டன் நிறைகொண்ட கோயலல்ன் வகுப்புக் குரூஸரும், அரைகுறையாய் கட்டப்பட்டிருந்த விமான-மேற்றிச்செல்லும் கப்பலொன்றும், அநேக நாசகாரிகளும், நீர்மூழ்கிகளும் இருந்தன.

பிரிடிஷ் விமானப்படையும், கப்பற்படையைச் சேர்ந்த விமானப்படையும் குறி சரியாகப் பார்த்து குண்டுகளைப்போட்டதற்கும், ஜெர்மன் கப்பல்கள் பழுதுபட்டதற்கும், ஒரு சக்தி-உற்பத்தி-யந்திரசாலை மேலும், டார்பிடோ, பீரங்கிகள் சேர்த்து வைத்திருந்த சாலை மேலும் குண்டுகள் நேராய் விழுந்ததற்கும் இந்தப் படங்கள் அத்தாக்ஷி என்று மிஸ்டர் ஸ்டீவர்ட் மேலும் எடுத்துரைக்கிறார்.

டாரண்டோ துறைமுகத்தில் அடிபட்ட இதாலிய சண்டைக் கப்பல்களைப் படம் பிடித்து படங்களை பிரிடிஷ் விமானங்கள் ட்யூரனை எதிர்த்தபோது அங்கே போட்டன. இவை உண்மைப் படங்களென்று ட்யூரின் வாசிகள் நம்பக் கூடியவையாயிருக்கின்றன.

## ஜெர்மன் கப்பல் ஒன்று பத்திரமாய் வந்து சேர்ந்ததில் ஜெர்மனிக்கு மகத்தான சந்தோஷம்.

ஹெலிகோலூந்து என்ற ஜெர்மன் கப்பலொன்று பத்திரமாகத் திரும்பி வந்ததில் சந்தோஷப்பட்டுக்கொண்டு டிஸம்பர் 12-ல் ஜெர்மன் ரேடியோ பெருமையடித்துக்கொள்ளுகிறது. ஒரு கப்பல் திரும்பி வந்ததில் என்ன பெருமை!

ஏழு கடல்களிலும் நிர்ப்பயமாக ஆயிரக்கணக்கான பிரிடிஷ் கப்பல்கள் ஓடித்திரிந்து திரும்புகின்றன. இதில் ஏதாவது ஒன்றுக்கு ஆபத்து வந்தால் அதைப்பற்றி பிரிடன் பிரஸ்தாபம் செய்யும். திரும்பி வரும் ஆயிரக்கணக்காண கப்பல்களைப்பற்றி பெருமைபாராட்டாது.

பிரிடிஷ் குரூஸரால் மறிக்கப்பட்டபோது இதார்வால்ட் என்னும் ஜெர்மன் கப்பலானது பிரிடிஷ் கப்பலைக் கண்டவுடன் தன்னையே தான் முழுகடித்துக் கொண்டது. இதைப் பெரிதுபடுத்தி, இதையுமொரு வீரச் செய்கையாக ஜெர்மனி செய்திவிடுத்திருக்கிறது.

## ஹா-ஹா கப்பலோட்டும் வித்தையைப்பற்றி சொல்லுவது.

தாரதம்யமில்லாது கொலைசெய்து போர் புரியும் ஜெர்மன் விமானப்படையெடுப்புக்கு பிரிடன் சற்றும் மனங்கலங்காது நிற்பதிலிருந்து ஹா-ஹாவுக்கு அளவில்லாக் கோபமேற்பட்டிருக்கிறது. ஜெர்மன் படையெடுப்பால் சேதம் அடைந்திருக்கும் ஸெண்ட்-மார்டின்ஸ்-இன்-தி-பில்ட்ஸ் ஆலயத்தில் கிருஸ்மஸ் பண்டிகையன்று கிரான் போர்ன் பிரபு செய்த பிரஸங்கத்தைப்பற்றி, மரியாதையின்றி கிரான் போர்னைச் சுட்டிக்காட்டி டிஸம்பர் 17-ல் நிந்தித்து ஹா-ஹா ஒலிபரப்பு செய்திருக்கிறார். சமாதானத்துக்கு வராமல் பிரிடிஷ் மக்கள் முட்டாள் தனமாய் மேற்கொண்டும் யுத்தம் செய்யப்போவதற்குக் காரணம் கற்பிக்கப் பார்க்கிறார்.

ஹா-ஹா சொல்லுவதாவது:—கப்பல் முழுகாதென்ற நம்பிக்கையிருக்கும் வரையில் பழுதுபட்டக் கப்பலையும் காப்பாற்றப் பார்ப்பது கப்பல் பிரயாணிகளின் கடமையாகும். ஆனால் பீச்சும் குழாய்கள் (பம்புக் குழாய்கள்) வேலை செய்யாதுபோய், தண்ணீரும் தங்குதடையின்றி உள் நுழைந்தபிறகு, கப்பற் தலைவனும் கப்பலை தப்புவிப்பது சாத்தியமில்லையென்று கைவிட்ட பிறகும் படகுகளைக்கொண்டு கரையேறாதது பயித்தியக்காரத் தனம் தான்.

ஹா-ஹா கப்பல்களைத் துறந்து ஓடும் வித்தையில் வல்லவர். ஆகவேதான் ஜெர்மன் கப்பல்கள் பழுதுபடு முன்னமேயே ஜெர்மானியர் கப்பல்களையுடைத்து விட்டு, மாலுமிகளும், படகுகளிலேறி ஓடிவிடுகிறார்கள். பிரிடிஷ் மக்களைப் போல் ஜெர்மானியர்களுக்குக் கப்பல்தலைவர் மீதும் தேசத்தலைவர் மீதும் நம்பிக்கை கிடையாது போலும்.

## டாக்டர் கோயபல்ஸுக்கு ஞாபகக்குறை வேற்பட்டிருக்கிறது.

ஸெப்டம்பர் மாதத்தின் நடுவில், வட கடலிலும், சானலிலுமிருக்கும் படையெடுப்புத்-துறைமுகங்களையும் தகர்த்ததின் முடிவாக சிறந்த நாஸிப் படைகளில் ஆயிரக்கணக்கானவர்கள் மடிந்தார்கள். இதிலிருந்து படையெடுக்கும் எண்ணத்தை ஹிட்லர் கைவிட நேரிட்டது. இதைப்பற்றிப் பேசுமிடத்து நியூ யார்க் டைம்ஸானது, பிரிடிஷ் படைகள் ஜெர்மன் கப்பல்களைக் கொளுத்திய தினுல் ஜெர்மானியருக்கு 80,000 பேர்கள் சேதமென்று சொல்லியிருக்கிறது, 'இது உண்மையானுல், ஏற்கனவே உத்தியோகமுறையில் பிரிடிஷ் பிரசார இலாகா, வழக்கப்படி அதிகப்படுத்தி, இதைப்பற்றி அறிக்கையை வெளியிட்டு பிரிடிஷ் மக்களின் தைரியத்தைப் பலப்படுத்தப்பார்த்திருக்குமே' என்று டாக்டர் கோயபில்ஸ் எருமை மாட்டைப்போல் கற்றி ஒலிபரப்பிப் பேற்றுகிருர். பிரிடிஷ் பிரசாரத்தில் அதிகப்படுத்திப் பேசுவதென்பது கிடையாது. ஸெப்டம்பர் 14, 15-ல் ஜெர்மனிக்கு ஏற்பட்ட சேதத்தை ஒரு மாதகாலம் வரை நிதானித்துப் பிறகு தான் அறிக்கை விடுக்கப்பட்டது.

படையெடுப்புத் துறைமுகங்களிலேற்பட்ட நாசத்தைப்பற்றி முதல் முதலாக நடுநிலைமை நாடுகளிலிருந்து செய்திகள் வெளிவந்தன. பிரிடிஷ் உத்தியோக அறிக்கை யேற்படுமுன்னர் பிரிடிஷ் அரசாங்கம் அநேக வாரங்கள் தீவிரமாய் விசாரணை செய்தார்கள். ஆனுல் ஜெர்மன் அறிக்கையில் ஒரு உண்மையிருக்கிறது. அதன்படி, பிரிடிஷ் மக்கள் இந்த வெற்றியைப்பற்றிக் கேட்க உர்சாகமடைந்தார் களென்பது உண்மைதான்.

## பிரிடிஷ் சைன்யத்தை லிபியாவில் இதாலியர்கள் பலஹீனப்படுத்துகிருர்களாம்.

டிஸம்பர் 19-ம் தேதி இதாலிய ஒலிபரப்புப்படி பிரிடிஷ் சைன்யத்தின் பலத்தை இதாலியர்கள் லிபியாவில் குறைத்து வருகிருர்களாம். என்ன பொய்! நைல்தீரத்தில் 40,000 இதாலியர்கள் கைது செய்யப்பட்டு மழுங்கி திகைக்கிருர் கள். பார்ட்டியாவில் 20,000 இதாலியர்கள் பிடிவாதமாய் வீரத்தோடு சண்டை செய்கிருர்களென்ருலும், அலுத்துப்போய் விட்டார்கள்; ஆபிரிக்காவில் பாக்கி யிருக்கும் இதாலியத் துருப்புகள் பிரிடிஷ் துருப்புகளோடு குகைகலக்கப் பயப்படு கிருர்கள். இவைகளை எல்லாம் மறைத்துவிட்டு இதாலிய ரேடியோ, 'சில நாட்களுக்கு முன் ஸிதி-பரானியை யடைந்த பலனிப்போது தான் கிடைத் திருக்கிறதென்று சொல்லுகிறது. நமக்குத் தெரிந்தவரையில் 60,000-பவுன் செலவு செய்து இதாலிய எஞ்சினியர்கள் போட்ட ஜய ரஸ்தாவானது இப்பொழுது அவர்கள் பின்வாங்க உபயோகப்பட்டிருப்பது உண்மையே.

## பிரிடிஷ்-விமான எதிர்ப்பால் வீடுகளின் மச்சுச்கள் (மேன்மாடம்) மட்டும் தீப்பிடித்ததாகச் சொன்ன ஜெர்மானியர்கள் இப்பொழுது தொழிலும் துறைந்ததாக ஒத்துக்கொள்ளுகிறார்கள்.

பிரிடிஷ்-விமான எதிர்ப்பால் வீடுகளும், ராணுவ-முக்கியமில்லாத மற்ற ஸ்தலங்கள்மட்டும் பழுதுபடுவதாக நாஜிகள் சொல்லிக்கொள்ளுவது இன்னும் ஓயவில்லை. ஆரம்பத்தில், மச்சுக்கள் மட்டும் தீப்பிடித்ததாகச் சொன்னவர்கள், இப்பொழுது மேல்மாடிகளும் தீப்பிடித்ததாகச் சொல்லுகிறார்கள். சமீபத்தில் பலமாய் எதிர்க்கப்பட்ட மான்ஹீம் தொழிற்சாலைகளைப்பற்றிப் பேசுமிடத்து, அநேக கட்டிடங்களோடு ஒரு அரண்மனையும் ஒரு ஆஸ்பத்திரியும் பழுது பட்டதாகச் சொல்லப்படுகிறது. இரண்டு தொழிற்சாலைகளில் ஏற்பட்ட பழுதானது பெரிதல்லவென்றும் சொல்லுவதிலிருந்து தொழிற்சாலைகளுக்கு ஏற்பட்டிருக்கும் சேதம் வெளியாகிறது. டாக்டர் கோயபல்ஸின் உத்தியோகஸ்தர்கள் பொய் சொல்ல அஞ்சாதவர்கள். அவர்களே தொழிற் சாலைகளுக்குப் பழுதென்று சொல்லுவதிலிருந்து மான்ஹீமில் பிரமாதமான விமான-எதிர்ப்பு நடந்ததென்று ஊகிக்க வேண்டும். டிஸம்பர் 16-ல் மான்ஹீமில் நடந்த படையெடுப்பு 8-மணி நேரம் நடந்தது.

90,000 டச்சுக் கட்டட வேலைக்காரர்கள் ஜெர்மனிக்குக் கொண்டு போனதாக அக்டோபர் முடிவில், ஜெர்மனி ஆதிக்கத்துக்குள்பட்ட டச்சு ரேடியோ சொன்ன செய்தியிலிருந்து ஜெர்மனியில் தொழிற் சாலைகள் அதிக நாசம் அடைந்திருப்பது வெளியாகிறது. டச்சு கண்டிராக்டர்களை, அவர்கள் சிப்பந்திகள், யந்திரங்கள் சகிதமாக ஜெர்மனிக்கு மாற்ற ஏற்பாடுகள் செய்யப்படுவதாக டியூட்ஸ் பெர்க்வர்க்ஸிடங்கு பத்திரிகையிலிருந்து வெளியாகிறது.

## சாப்பாட்டு சம்பந்தமான துர்ஸ்வப்பனம்.

சமீபத்தில் வாழை (கதலி) ப்பழமானது அவசியமில்லாத உணவென்றும் ஆகவே அதை இறக்குமதி செய்யக்கூடாதென்றும் பிரிடனில் தடை உத்தரவு போடப்பட்டிருக்கிறது. யுத்தத்துக்கு முன் பிரிடனில் வருஷத்துக்கு தலைக்கு ஏறக்குறைய 14 டன்கள் நிறையுள்ள வாழைப்பழம் வாங்கிச் சாப்பிடப்பட்டதாக டிசம்பர் 19-ம்தேதியில் ஜெர்மன் ரேடியோ சொல்லியிருக்கிறது.

இந்தக் கணக்குப்படி ஒவ்வொரு பிரிடிஷ் வாசியும் தினசரி 100 பவுண்டு அல்லது 50 சேர் வாழைப்பழத்தைச் சாப்பிடவேண்டும். இது மனிதனால் முடியாது. மேலும் இது உண்மையானால் பிரிடனுக்கு இனி கப்பல் பஞ்சம் கிடையாது. ஏனென்றால் இந்தப் பிரமாண்டமான வாழைப் பழங்களை ஏற்றிவர கப்பல்கள் அட்லாண்டிக் சமுத்திரத்தில் 10 லக்ஷம் தடவை வரவேண்டும். வாழைப்பழ இறக்குமதி தடுக்கப்பட்டதால் இனி இதற்கெல்லாம் கப்பல்களே வேண்டியதில்லை.

## ஜெர்மனிக்குப் பிரதம—சிகிச்சை—ஸ்வீடனிலிருந்து.

லெப்டினன்ட்-கர்னல்குன்னார்ட்-ஜொகான்ஸன் என்ற விமான-நிபுணன் ஒருவன், ஸ்டாக்ஹோம் பத்திராதிபர்களிடம், பிரிடிஷ் வெடிகளால் ஹாம்பர்க்கில் ஒரு துறைமுகமாவது, கிரேனு(Crane)-வது, கப்பல்-கட்டும் துறையாவது பழுது பட்டதாகத் தெரியவில்லையென்று சொன்னதை டிஸம்பர் 23-ல் ஒலிபரப்பி ஜெர்மனி ஆனந்தபரவசமாகிறது. ஸெண்ட்-மைகேல் ஆலயத்தின் கோபுரத்தில் இருந்து பார்த்ததில் ஹாம்பர்க்கில் பண்டகசாலைகள் பத்திரமாயிருப்பது தெறிந்து விட்டதாகச் சொல்லப்படுகிறது.

மேற்சொன்ன நிபுணர் பண்டகசாலைகளை நேரில் பார்த்திருந்தால் நலமாய் இருந்திருக்கும். ஹாம்பர்க் பழைய பாகத்தில் மேற்சொன்ன ஆலயமானது இருக்கிறது. அது ராணுவ முக்கியமில்லாததால் பிரிடிஷ் விமானங்கள் அதை எதிர்த்து இருக்கமாட்டா. அந்தக் கெட்ட வழக்கம் ஜெர்மனிக்குத்தான் உண்டு. இந்த ஆலயத்தைச்சுற்றி பழக்கடைகளும், காய்கறிக்கடைகளும் தானிருக்கின்றன. 4,095 ஏக்ரா விஸ்தீர்ணமுள்ள ஆழ்ந்த கப்பல்கட்டுத்துறைகளும், பண்டசாலைகளும் ஆலயத்துக்கு வெகுதூரத்துக்கப்பாலிருக்கின்றன. ஆலகோபுரத்திலிருந்து கொண்டு, விமான நிபுணராலும் தொழிற்-சாலைகளைப் பார்ப்பது சாத்தியமான காரியமேயில்லை.

# B—ஆசியா பாஷைகளில் ஒலிபரப்பு.

## இவைகள் சொல்லாமலே பொய்யென்று விளங்கும்.

**டிஸம்பர் 10—**

இன்று 6,000 இதாலியர்கள் சிறைப்பட்டார்கள்; ஒரு சேனாதிபதி பிடிக்கப் பட்டார்; மற்றொரு சேனாதிபதி கொல்லப்பட்டார். ஆனால் இந்தத் தேதியில் இதாலியானது அராபி பாஷையில் ஒலிபரப்பியதாவது:—‘பிரிடிஷ்காரர்களை சிக்ஷிப்பதற்காக லிபியாவில் இதாலியத் துருப்புகள், சேனாபதி கிரேஸியானியின் உத்தரவுக்குக் காத்துக்கொண்டிருக்கின்றன.

**டிஸம்பர் 12—**

அராபியில் இதாலி ஒலிபரப்பியதாவது:—ஒரு பெரிய சாம்ராஜ்யத்தை ஸ்தாபிப்பது இதாலிக்கு இதுவரையில் ஆசையோடு நின்றது; இனி அதை சாச்வதமாக ஸ்தாபித்துவிடும்.

**டிஸம்பர் 13—**

இந்தத் தேதியில் ஸிடி-பரானி பிடிக்கப்பட்டு 20,000 இதாலியர்களும், 3 சேனைத் தலைவர்களும் பிடிக்கப்பட்டார்கள்.

இதே தேதியில் இந்துஸ்தானியில் இதாலியின் ஒலிபரப்பு:—‘பிரிடனுக்கு வெற்றி கிடைக்குமென்ற ஆசை வேண்டாம். இப்பொழுது பிரிடனனது நாலா பக்கங்களிலும் அடிபடுகிறது.’

## அபூதக்கற்பனைக்கு அளவில்லை.

'ரகஸ்ய ஆயுதம்' ஒன்றைக் கண்டுபிடித்துவிட்டதாக கற்பனை ஒன்று முதலில் செய்யப்பட்டது. இப்பொழுது மனிதர்கள் புதிதாக ஜெர்மனியால் சிருஷ்டிக்கப்படுகிறார்கள். 'மிஸ்டர் பாபுலால்' என்று ஒருவர் இந்தியாவில் இருக்கிறாராம். காங்கிரஸ் கக்ஷிக்கு ஒரு புது ஆபீஸ் ஏற்பட்டிருக்கிறதாம். அதற்கிவர் வைஸ் பிரஸிடெண்டாம். 'ஜனங்களுடைய இஷ்டத்துக்கெதிராக இந்தியா யுத்தத்தில் சேர்ந்திருக்கிறது' என்று இவர் சொல்லுகிறாராம்; இவ்விதம் ஒரு அமெரிக்கா பத்திரிகை எழுதுகிறதாம். அமெரிக்கா பத்திரிகையும் ஜெர்மன் கற்பனையாகத்தான் இருக்கும்.

இந்தச் செய்தி (டிஸம்பர் 16) அராபியில் வெளிவந்ததே ஒழிய இந்துஸ்தானியில் வரவில்லை. இந்த சூதானது அச்சு நாடுகளுக்கு ஸகஜம். முன்னொரு முறை (நவம்பர் 18-ல்) ஸிந்தில் கலகம் நடந்ததாகப் பொய்ச் செய்தியை அராபியில் மட்டும் வெளியிட்டார்கள். மற்றொருமுறை (அக்டோபர் 13) எகிப்தில் பிரிடனுக்கு விரோதமாக சச்சரவேற்பட்டதாக இந்துஸ்தானியில் மட்டும் சொல்லப்பட்டது. அதற்குமுன் பம்பாயில் இந்தியர்களுக்கும், பிரிடிஷ் சிப்பாய்களுக்கும் கலகம் நடந்ததாக அராபியில் சொல்லி இந்துஸ்தானியில் மறைக்கப்பட்டது.

## ஸ்வீடனானது நாஸிகளின் அரசியலைக் கண்டிக்கிறது.

பிரிடனிடத்தில் நட்பைக் காண்பித்தால் டேனிஸ்மக்கள் புது அரசியலில் இருந்து விலக்கப்படுவார்களென்று ஜெர்மனி பயமுறுத்துவதாக அனேமதேய டேனிஷ் பத்திரிகை ஒன்று டிஸம்பர் 18-ல் எழுதியிருக்கிறதாம். இம்மாதிரியாகப் புது அரசியலைப் பற்றி அடிக்கடி ஸ்தோத்திரம் செய்துகொள்ளுவது பரிதபிக்கத் தக்கது. ஜெர்மனியின் அரட்டலுக்குப் பயப்படாத தேசங்கள் ஜெர்மானியர் மறைத்துச் சொல்லும் புது அரசியலெல்லாம் கொடுங்கோலென்று தெறிந்து கொண்டு அப்படியே பகிரங்கமாய் சொல்லுகின்றன. புது அரசியலென்பதும், 'வசிக்க இடம்' என்பதும், ஸ்வீடனுக்கும், அதைப்போன்ற சிறு தேசங்களுக்கும் பிடிக்காத ஏற்பாடென்றும், அந்தப் புது அமைப்பினால் சிறு தேசங்கள் குறிப்பிட்ட இடத்தில் அடங்கிக் கிடக்கவேண்டியதுதான் என்றும், ஸ்வதந்திரத்தை இழக்கவேண்டியதுதானென்றும், சிறு தேசங்களின் வியாபாரமெல்லாம் பெரிய ஒரு தேசத்துக்கு வேண்டியவாரு மாற்றப்படுமென்றும், சிறு ஸமஸ்தானங்கள் பெரியதொரு தேசத்தை அண்டி பாபராகி விடுமென்றும், ஆகவே உலகத்தை ஜெர்மானியர் சொல்லும் பிரகாரம் மாற்றியமைப்பதால் நிரந்திரமான சமாதானம் உலகத்தில் ஏற்படாதென்றும், டிஸம்பர் 18-ல் ஸ்வீடனுடைய அயல்நாட்டு மந்திரி எம் உண்டின் வியத்தமாய்ச் சொல்லிவிட்டார். ஸ்வீடனானது நாஸிகள் வேண்டுமானால் எளிதில் எதிர்க்கக்கூடியதான ஜெர்மனிக்குச் சமீபமான ஒரு சிறு தேசம். இந்த தேசம் இவ்வளவு தைர்யமாய் உள்ளதைச் சொன்னது ஆச்சர்யம் தான்.

## 1917-ம் வருஷமும், நடப்பு வருஷமும்.

1917-ம் வருஷத்தைப்போல் இப்பொழுது ஜெர்மன் நீர் மூழ்கிகளால் பிரிடனுக்கு விபத்தேற்பட்டிருப்பதாக ஒரு கப்பர்படை நிபுணன் சொல்லுவதை அங்கீகரித்து டிஸம்பர் 20-ல் ஜெர்மனி ஒலிபரப்பியிருக்கிறது. 1917-ல் பிரிடனுடைய நிலைமை கவலைக்கு இடமாயிருந்ததாம்.

1917-ம் வருஷத்திய யுத்தத்தோடு நடப்பு யுத்தத்தை ஒப்பிடுவது ஜெர்மானியருக்கனுகூலமில்லை. ஏனென்றால் 1917-ல் நீர்மூழ்கிகளால் சேதம் ஏற்பட்டாலும் 1918-ல் ஜயமடைந்தது பிரிட்டனே.

# புதுக்கோட்டை ஸமஸ்தான யுத்த அறிக்கை நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

## பிரஸங்கம் XXV.

1941—

| | | | | | மணி. |
|---|---|---|---|---|---|
| ஜனவரி | 4, சனிக்கிழமை ... | டவுன் ஹால் | ... | மாலை | 6.30 |
| | 5, ஞாயிற்றுக்கிழமை. | புதுக்கோட்டை டவுன் முஸ்லீம் சங்கம். | | ,, | 5.00 |
| | | திருவப்பூர் | ... | ,, | 5.00 |
| | 6, திங்கட்கிழமை ... | காலேஜ் (B) தமிழ் | ... | காலை | 10.25 |
| | | ராணி பெண்பாடசாலை | ... | ,, | 10.25 |
| | | வேகுபட்டி | ... | மாலை | 5.30 |
| | 7, செவ்வாய்க்கிழமை. | காலேஜ் (A) ஆங்கிலம் | ... | காலை | 10.25 |
| | | பூவரசகுடி | ... | மாலை | 5.30 |
| | | காரையூர் | ... | ,, | 5.30 |
| | 8, புதன்கிழமை ... | நச்சாந்துபட்டி | ... | ,, | 5·30 |
| | 10, வெள்ளிக்கிழமை... | C.S.M. பள்ளிக்கூடம் | ... | காலை | 10.00 |
| | | திருமயம் | ... | மாலை | 5.30 |
| | | கீழாநிலை | ... | ,, | 5.00 |

## பிரஸங்கம் XXVI.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஜனவரி | 11, சனிக்கிழமை ... | டவுன் ஹால் | ... | மாலை | 6.30 |
| | 16, வியாழக்கிழமை ... | காலேஜ் (A) ஆங்கிலம் | ... | காலை | 10.25 |
| | | ராணி பெண்பாடசாலை | ... | ,, | 10.25 |
| | | சேரி பள்ளிக்கூடம் | ... | மாலை | 5.30 |
| | | புதுக்கோட்டை டவுன் உபாத்தியாயர்கள் சங்கம். | | ,, | 5.30 |
| | | கரம்பக்குடி | ... | ,, | 5.30 |
| | | ஒடையாளிப்பட்டி | ... | ,, | 5.30 |
| | | அன்னவாசல் | ... | ,, | 5.30 |
| | | வேந்தம்பட்டி | ... | ,, | 5.30 |
| | 17, வெள்ளிக்கிழமை... | C.S.M. பள்ளிக்கூடம் | ... | காலை | 10.00 |
| | | குழிபிரை | ... | மாலை | 5.30 |
| | | அரிமளம் | ... | ,, | 5.00 |
| | | கொப்பனுபட்டி | ... | ,, | 5.30 |
| | | குடுமியாமலை | ... | ,, | 5.30 |